Registered as a Newspaper in Ceylon

விலை சதம் 10

# ஈழநாடு

EELA NADU

போன்: 389 National Tamil Daily தேசிய தினசரி

மலர் 6 யாழ்ப்பாணம் குரோதி புரட்டாதி 22 ஆம் நாள் ஜ. ஆகிர் பிறை 1 (8-10-64) வியாழக்கிழமை இதழ் 239

போன்: 506 தந்தி: 'வணக்கம்'

ஆ. அப்பையா அன் கோ.

82, கே. கே. எஸ். ரோட், 54, பெரியகடை, யாழ்ப்பாணம்.

தீபாவளிப் பண்டிகையை முன்னிட்டு மாபெரும்

மலிவு விற்பனை

தொடர்ந்து நடைபெறுகிறது என்பதை அன்பர்களுக்கு அறியத் தருகிறோம்.

பார்லிமெண்ட்

# ஒழுங்கு பிரச்னை மீது காரசாரமான விவாதம்

## பத்திரிகை மசோதா: சபாநாயகர் இறுதி முடிவு இன்று வெளியாகும்

### ஏரிக்கரை பத்திரிகைகளை பொறுப்பேற்க அரசாங்க கட்சி இணக்கம் தெரிவித்தது

கொழும்பு, புதன்

பத்திரிகை மசோதாவை அடுத்த வருடத்துக்கு ஒத்திவைப்பது சம்பந்தமாக சபாநாயகர் நேற்று அளித்திருந்த தீர்ப்பை இல்லாமல் செய்து, பத்திரிகை மசோதாவை மீண்டும் பார்லிமெண்டில் கொண்டுவருவதற்கான முறையை ஜனப்பிரதிநிதிகள் சபை ஏற்பாடு செய்யவேண்டுமென்ற அரசாங்க கட்சியின் பிரேரணை ஒன்றின்மீது இன்று நீண்ட நேரம் வரை விவாதம் நடைபெற்றது. எதிர்க்கட்சியினரின் ஒழுங்கு பிரச்னைமீது இவ்வளவு நீண்டநேரமாக காரசாரமான விவாதம் நடைபெற்றது, இலங்கை பாராளுமன்ற சரித்திரத்திலேயே இதுவே முதல் தடவை என்பது குறிப்பிடத்தக்கது.

ஒழுங்கு பிரச்னை மீதான விவாதம் இன்றிரவுவரை நடைபெற்றது. தமது முடிவை நாளை மாலை நான்கு மணிக்கு அறிவிப்பதாகத் தெரிவித்து சபை கூட்டத்தை நாளை மாலை வரை சபாநாயகர் தற்காலிகமாக ஒத்திவைத்தார்.

பத்திரிகை மசோதா சம்பந்தமாக சபாநாயகர் நேற்று அளித்திருந்த முடிவை மாற்றி பத்திரிகை மசோதாவை மீண்டும் விவாதத்துக்கு எடுத்துக்கொள்ள வேண்டுமென்றும் கோரி அரசாங்க கட்சியினர் இன்று ஒரு பிரேரணையைக் கொண்டுவந்திருந்தனர்.

இந்தப்பிரேரணையை எதிர்க்கட்சியினர் வன்மையாக ஆட்சேபித்திருந்தனர். சுமார் 4 மணிநேரமாக இருசாராருக்குமிடையே காரசாரமான விவாதம் நடைபெற்றது.

பத்திரிகை மசோதா சம்பந்தமாக சபாநாயகர் நேற்று அளித்திருந்த முடிவை மாற்ற சபைக்கு அதிகாரம் கிடையாது என்றும், இந்த முறை சட்டவிதிகளுக்கும் சபையின் சம்பிரதாயங்களுக்கும் அப்பாற்பட்டதென்றும் இதனை ஆட்சேபிக்க ஒருவருக்கும் உரிமை கிடையாது என்றும் எதிர்க்கட்சியினர் தெரிவித்திருந்தனர்.

ஒழுங்கு பிரச்னைமீதான விவாதத்தை திரு. டட்லி சேனநாயக்கா ஆரம்பித்து வைத்துப் பேசுகையில், அரசாங்க பிரேரணை சகலவற்றிலும் புறம்பானதென்றும் இதனை அங்கீகரிக்க சபைக்கு அதிகாரம் கிடையாதென்றும் கூறினார்.

திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தனா பேசுகையில், அரசாங்கம் கொண்டுவந்த பிரேரணை ஜனநாயகத்தை ஒழித்துக்கட்டி சர்வாதிகார ஆட்சியை ஏற்படுத்த வழி செய்வதாக இருக்கிறது என்று கூறினார்.

பிரேரணைக்கு ஆதரவு தெரிவித்து டாக்டர் என். எம். பெரேரா பேசுகையில் சபையின் நிரந்தர விதிகளுக்கு அமையக்கூடிய விதத்திலேயே பிரேரணை கொண்டுவரப்பட்டிருக்கிறதென்றும் சபாநாயகரின் முடிவை குறைவு படுத்தும் நோக்கத்துடன் இது அமையவில்லை என்றும் கூறினார். இப்படியான பிரேரணைகள் இப்பொழுதே இங்கு முதற்தடவையாக கொண்டுவரப்பட்டபொழுதிலும் பிரிட்டிஷ் காமன்சபை நடவடிக்கைகளையே இது பின்பற்றுகிறதென்றும் கூறினார்.

"அரசாங்க நடவடிக்கைகளையும் அரசாங்க பிரேரணைகளையும் அமுல் நடத்தவே பார்லிமெண்ட் இயங்குகின்றது. இதற்காக கருமங்கள் செய்ய அதிகாரம் உண்டு" என்றும் நிதிமந்திரி கூறினார்.

டாக்டர் தகநாயக்கா பேசுகையில், சபாநாயகரின் முடிவை முற்றாக ஒழித்துக்கட்ட எவருக்கும் அதிகாரம் இல்லை என்று கூறினார்.

அரசாங்க கட்சியினருக்கும் எதிர்க்கட்சியினருக்குமிடையே நடைபெற்ற காரசாரமான விவாதத்தைதொடர்ந்துசபையை நாளை மாலைவரை சபாநாயகர் தற்காலிகமாக ஒத்திவைத்தார். நாளை மாலை 4 மணிக்கு சபாநாயகர் தமது தீர்ப்பை வழங்குவார்.

பார்லிமெண்டில் நேற்று நடைபெற்ற நிகழ்ச்சிகளை "கான்சாட்"ல் இருந்து விலக்கிவிட வேண்டுமென்பதற்கேற்ப அர

(6-ம் பக்கம் பார்க்க)

## கட்சியிலிருந்து இருவர் நீக்கம்

கொழும்பு, புதன்

அரசாங்க கட்சி கொண்டு வந்த பிரேரணைக்கு எதிராக வாக்களித்த முன்னாள் மந்திரி திரு. மகாநாம சமரவீராவும், நியமன எம். பி. திரு. எல். ஒ அபயரத்தினவும் அரசாங்கக் கட்சியிலிருந்து தற்காலிகமாக நீக்கப்பட்டுள்ளனர். பிரேரணை வாக்கெடுப்புக்கு விடப்பட்ட சமயத்தில், சபையில் சமுகமளித்திருக்காத நிவிட்டிகல எம். பி. மீது விளக்கம் கோரப்பட்டுள்ளது.

இந்தத் தீர்மானங்கள் இன்று நடைபெற்ற அரசாங்க கட்சியின் அவசர கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டது.

## அதிர்ச்சி!

கொழும்பு, புதன்

ஏரிக்கரைப் (லேக்ஹவுஸ்) பத்திரிகைகளை அரசாங்கம் பொறுப்பேற்க வேண்டுமென்று கோரும் பிரேரணையொன்று இன்று இரவு நடைபெற்ற அரசாங்க கட்சியின் அவசரக் கூட்டத்தில் ஏகமனதாக நிறைவேற்றப் பட்டதாய் தெரியவருகிறது.

பத்திரிகைகளின் ஏக போக உரிமைகளை இல்லாமற் செய்வதற்கான மசோதா ஒன்றைக் கொண்டு வருவதன் மூலம் இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்படும். இது சம்பந்தமான இறுதி முடிவு மந்திரி சபையிடம் சமர்ப்பிக்கப்படும்

கெய்ரோ மகாநாடு

## இந்தியப் பிரதமர் சமர்ப்பித்த 5 அம்ச செயல் திட்டம்

கெய்ரோ, அக். 7

சமாதான சகவாழ்வு அடிப்படையில் ஐந்து அம்ச செயல் திட்டமொன்றை இந்தியப் பிரதமர் திரு. லால்பகதூர் சாஸ்திரி இன்று நடைபெற்ற கெய்ரோ மகாநாட்டில் சமர்ப்பித்தார்.

○ அணு ஆயுதங்களை அறவே விலக்குவது. ஓரளவு அணு ஆயுத தடை ஒப்பந்தத்தில் மற்றைய நாடுகளையும் கையெழுத்திட முயற்சிப்பது. ஒப்பமிடாத நாடுகளை வன்மையாக கண்டிப்பது. ○ எல்லைத் தகராறுகளை அமைதியாக - பேச்சுவார்த்தை மூலம் தீர்ப்பது. ○ காலனிக் கொள்கையை ஒழிப்பது. இன ஒதுக்கல் கொள்கைகளுக்கு எதிராக கடுமையான நடவடிக்கை மேற்கொள்வது. ○ தேசங்களுக்கிடையே ஒற்றுமையையும் ஒத்துழைப்பையும் நிலை நாட்டுவது. ○ ஐ. நா. சாஸனத்துக்கு மதிப்பு கொடுப்பது. ஆகியவையே இந்த ஐந்து அம்சங்களாகும்.

சீன அணுகுண்டு பற்றி பிரதமர் சாஸ்திரி பேசுகையில்; சீன அணுகுண்டு விஷயத்தைப் பற்றி மகாநாடு கடுமையாக ஆலோசிக்க வேண்டுமென்றும் அணு ஆயுதங்களை சீனா உற்பத்தி செய்வதை தடை செய்யும் பொருட்டு அங்கு ஐவர் கொண்ட தூது கோஷ்டியொன்று அனுப்பப்பட வேண்டுமென்றும் யோசனை தெரிவித்தார்.

சீன-இந்திய எல்லைத் தகராறினால் இந்த யோசனையை தாம் வெளியிடவில்லை என்றும் கூறினார்.

## சிங்கள ஆசிரியர்களை அனுப்பினால் மறியல் நடத்துவோம்

### வன்னியசிங்கம் நினைவுதின கூட்டத்தில் எஸ். ஜே. வி.

மாவிட்டபுரம், புதன்

"தமிழ்ப் பாடசாலைகளிலே அரசாங்கம் சிங்கள ஆசிரியர்களை அனுப்பும்போது சம்பந்தப்பட்ட பாடசாலைகளிலே நாம் மறியல் செய்யவேண்டியவர்களாவோம். இதற்குத் தொண்டர்கள் தேவை. அத்தொண்டர்களுக்கு முன் செல்பவர்களாக பாராளுமன்ற உறுப்பினர் இருப்பர். அந்தப் பாராளுமன்ற உறுப்பினர்களிலே முதலில் நிற்பவன் நானாக இருப்பேன்" என்று கீரிமலையில் நடைபெற்ற வன்னியசிங்கம் நினைவு தினக் கூட்டத்தில் தலைமையுரையின் போது திரு. செல்வநாயகம் குறிப்பிட்டார்.

"சிங்களம் படிக்கப்படுவதை நாங்கள் ஏற்றுக் கொள்வோமானால் புகுத்தப்பட்ட சிங்களம் இன்னும் 2 வருடத்துள் கட்டாய பாடமாக வந்துவிடும். 5 வருடத்துள் அது போதனா மொழியாக்கப்பட்டுவிடும். பின்னர் எங்கள் பிள்ளைகள் சிங்கள அரிவரி ஏட்டை தூக்க வேண்டி வரும். தமிழை ஒதுக்கி வைத்துத் தமிழ்ப் புத்தகத்தை விட்டு சிங்களத்தைப் படித்திட வேண்டிய அந்த நிலையிலிருந்து தப்ப முடியாதவர்களாவோம் என்றார்

கிரிக்கெட் டெஸ்ட்: 1

## ஆஸி. வென்றது

### அடுத்த டெஸ்ட் பம்பாயில் சனியன்று ஆரம்பம்

சென்னை, அக். 7

ஆஸ்திரேலியாவுக்கும் இந்தியாவுக்குமிடையே இங்கு நேரு மைதானத்தில் நடைபெற்ற முதலாவது கிரிக்கெட் டெஸ்ட் போட்டியில் ஆஸ்திரேலியா 139 ரன்களால் வெற்றி பெற்றது.

ஸ்கோர் விபரம் வருமாறு:

ஆஸ்திரேலியா

1-வது இன்னிங்ஸ் 397

2-வது இன்னிங்ஸ் 211

இந்தியா

1-வது இன்னிங்ஸ் 276

2-வது இன்னிங்ஸ் 193

இந்தியாவின் இரண்டாவது இன்னிங்ஸில், ஆஸ்திரேலிய வீரர் மக்கன்ஸி, மொத்தம் 33 ஓட்டங்களை கொடுத்து 4 விக்கட்டுகளை வீழ்த்தினார். இந்தியாவின் முதல் இன்னிங்ஸில் 128 ஓட்டங்களை எடுத்த இந்திய கப்டன் பட்டோடியை ஒரு ஓட்டம் மட்டும் கொடுத்து

(6-ம் பக்கம் பார்க்க)

மணிவாக்கு

நமது மனம் பூரணமாகத் தூய்மை அடைந்தால் நமது சத்துருக்களும் நம் நண்பர்களாக மாறி விடுவார்கள்.

— சுவாமி ராமதாஸ்.


# ஈழநாடு

EELA NADU

EELA NADU National Tamil Daily, Post Box 49, Jaffna
Telegrams EELA NADU Jaffna
Phone 389

யாழ்ப்பாணம் குரோதி ஆண்டு
புரட்டாதி ீ 22 உ (8-10-64)


## நோயாளர் புகார்

காங்கேசன் துறை ஆஸ்பத்திரியில் அந்தியாவசியமான மருந்துகள் இல்லாததுடன் குடிக்கத் தண்ணீரும் இல்லையாம். நோயாளர் உப்புத்தண்ணீர்தான் குடிக்கவேண்டியுள்ளதாம். அங்கு விஜயம் செய்த காங்கேசன் துறைப் பட்டினசபைத் தலைவரிடம் இதுபற்றி நோயாளர் முறையிட்டுள்ளதாகத் தெரிகிறது. இதேமாதிரி நிலைதான் இங்கு வேறு சில ஆஸ்பத்திரிகளிலும் கடந்த பலமாதங்களாக நிலவுவதாக பல புகார்கள் கிடைக்கின்றன. இதில் ஓரளவும் உண்மையாயின், அது நோயாளருக்குச் செய்யும் பெரும் பாதகமாகும்.

தனிப்பட்ட வைத்தியர்களிடம் சிகிச்சை பெறவோ, தனிப்பட்ட மருந்துச் சாலைகளில் பணம் கொடுத்து மருந்து வாங்கவோ வசதியற்ற எளிய மக்கள்தான் அரசினர் ஆஸ்பத்திரிகளை பெரும்பாலும் நாடுகின்றனர். பொதுமக்களின் பணத்தினுல் பொதுமக்களின் நலனுக்காக அமைக்கப்படும் ஆஸ்பத்திரிகளில் அவர்களின் நோயைக் குணப்படுத்துவதற்கு மருந்துகள் இல்லையெனில் ஆஸ்பத்திரிகள் நடத்துவதில் என்ன பயன்?

ஆஸ்பத்திரிகளில் மருந்துத் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ள தற்குரிய காரணம் என்ன? அரசினர் ஆஸ்பத்திரிகளுக்கு மருந்துகள் விநியோகம் செய்யும் 'சிவில் மெடிக்கல் ஸ்டோர்ஸ்' உரிய மருந்துகளை அந்தந்த நேரத்துக்கு அனுப்பத் தவறுவதுதான் இதற்கு முக்கிய காரணமென ஆஸ்பத்திரி அதிகாரிகளை விசாரித்ததிலிருந்துதெரியவருகிறது. தேவையான மருந்துகளின் விபரத்தை உத்தியோக மொழியான சிங்களத்தில் எழுதி அனுப்பாததற்காக மருந்துகளை வழங்க மறுத்ததும் இந்த 'சிவில் மெடிக்கல் ஸ்டோர்ஸ்' நிர்வாகிகள் என்பதையும் மறந்துவிட முடியாது. இந்த ஸ்டோர்ஸிலிருந்து மருந்துகள் உரிய சமயத்தில் கிடைக்காவிட்டால் அத்தியாவசியமான சில மருந்துகளை அந்தந்த ஆஸ்பத்திரி நிர்வாகிகள் தனிப்பட்ட மருந்துச்சாலைகளில் பணம் கொடுத்து வாங்கி நோயாளிகளுக்குச் சிகிச்சையளிப்பதற்கு அதிகாரம் உண்டு. எனினும் வாங்கிய மருந்துகளின் அவசியம் பற்றியும அதன்விலை பற்றியும் பின்னர் சிவில் மெடிக்கல் ஸ்டோர்ஸ் நிர்வாகியின் அங்கீகாரம் பெறவேண்டியது அவசியம். சென்ற ஏப்ரல் மாதத்தின்பின் யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரி நிர்வாகிகள் தனிப்பட்ட வைத்தியசாலைகளில் வாங்கிய மருந்துகளுக்கு சிவில் மெடிக்கல் ஸ்டோர்ஸின் அங்கீகாரம் கிடைக்கவில்லையாதலால் இப்பொழுது தனிப்பட்ட மருந்துச்சாலைகளில் மருந்து வாங்கி சிகிச்சையளிப்பது கூட யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரி அதிகாரிகளுககுச் சங்கடமாக உள்ளதாம்.

காங்கேசன்துறை ஆஸ்பத்திரி நோயாளிகளைப் போன்று தீவுப்பகுதிகளிலும் மற்றும் இடங்களிலும் ஆஸ்பத்திரிகளிலுள்ள நோயாளிகள் குடிதண்ணீர் கிடைக்காமலும் கஷ்டப்பட்டு நோயைக் குணப்படுத்தி உயிரைக்காப்பாற்றிக்கொள்ள பெரும் முயற்சி செய்யும் பொழுது நோயைக் குணப்படுத்த மருந்தே இல்லையென்ருல் ஆஸ்பத்திரிக்கு கொஞ்சநஞ்ச நம்பிக்கையுடன் வந்தவர்களும் அதை இழந்துவிடுவார்கள். ஆஸ்பத்திரி மரணப்படுக்கையாக மாறுவதானுல் அந்த ஆஸ்பத்திரிகள்தான் ஏன்? வைத்தியர்களும், நிபுணர்களும் தான் எதற்கு?

மருந்துத்தட்டுப்பாடு இனியும் நீடிப்பது நாட்டின் நலனுக்கும் பெருமைக்கும் நிச்சயம் நல்லதல்ல இவவிஷயத்தில் சுகாதார மந்திரியும் அரசாங்கமும் உடனடியாகக் கவனம் செலுத்தி நோயாளரின் குறையை நீக்கவேண்டியது மிகவும் அவசரமும் அவசியமுமாகும்

# நவராத்திரியும் நம்மன்னையும்

— பண்டிதர் பொ. கிருஷ்ணபிள்ளை —

### சிவன் பெண்ணுகிய பெருமான் ஆகின்ருன்

தலையின் வடிவுடையவளே தாய். அத்தாயே நாம் முதற் காணும் தெய்வம். நம்மிடமும் ஏதாவது தயையென்ற குணம் அரும்பினுல் அதற்குக் காரணம் அன்னவளே. நம் தாயே இத்தகையள் ஆயின் உலகன்னையின் எல்லையில் கருணை எடுத்தியம்ப ற்பாலதாமோ?

நவராத்திரிகாலத்திலே உலகன்னை உமை கைலையைவிட்டு இல்லங்கள் தோறும் எழுந்தருளி மனிதவர்க்கத்துக்கு அருள் பொழிவதாக வங்காளிகள் நம்புகின்றனர். ஆகவே இப்புனித நாட்களிலே வீடெல்லாம் பரிசுத்தம் கமழ, அழகொடு பொலிவுமுற பாவைக்கொலுவும் வைப்பர் நம்மவர். அம்பிகையின் அருள் சொரியும் இயல்பைக் குழந்தையும் உணர,

"நம்பினேர் கெடுவதில்லை
நான்கு மறைத் தீர்ப்பு
அம்பிகையைச்
சாணடைந்தால் அதிக
வரம் பெறலாம்"

என்று பாரதி தம் அனுபவத்தோடொட்டிக் கூறுகின்ருர். "ஒருவனே தேவன்" என்பது திருமூலர் திருமந்திரம். தானான தனி ஆனந்த நிலையில் இறைவன் சிவம் எனப்படுகிருன். உலகிற்கு இரங்கும் நிலையில் அவன் சக்தி எனப்படுகிருன். ஆன்மாக்களுக்காக ஐந்தொழில் செய்யும் நிலையிற் பதி எனப்படுகிருன். ஆகையினுலேதான் அவனை பெண்ணுகிய பெருமான்" என்கிருர் சம்பந்தப்பிள்ளையார்.

### சிலமும் செல்வமும் ஞானமும் அருளும் தாய்

ஏகனை அன்னையாகப் பாவித்து நாங்கள் ஒன்பது இரவு மாலை நேரங்களில் வழிபாடு செய்கின்றமையால் அந்த ஒன்பது இரவுகளும் நவராத்திரி இரவுகள் எனப்படுகின்றன. மனிதனுக்கு வேண்டிய மூன்று பொருள் வீரம், செல்வம், கல்வி என்பனவாம். அந்த வீரத்தை அருளும் நிலையில் பராசக்தி துர்க்கை எனப்படுகின்ருள். இங்ஙனமே செல்வந்தரு நிலையில் இலச்சுமி எனவும், ஞானம் வழங்கும் நிலையில் வாணி எனவும் அந்த ஏக சக்தியின் மூன்று அம்சங்களும் முறைப்படி புரட்டாதி மாதப் பூர்வபக்கப் பிரதமைத் திதி தொடங்கி மும்மூன்று நாட்களுக்கு வழிபாடு செய்யப்படுவன.

"திருவிழை மாந்தர் திருமகட் கண்டனர்
கலைவிழை மாந்தர் கலைமகட் கண்டனர்
சுற்றமும் தொடர்பும்
நீக்கிய கொள்கைப்
பற்று மாண்பினர்
பரவெளி கண்டனர்
யாயெனக் கண்டனம்
யாம்......"

அகப்புறப்பற்றுக்கள் நீங்கிய துறவிகளுக்கு அவள் அருள் நெறி காட்டும் பரவெளி. வித்தையை விரும்புவோர் அவளை வாணியாக, செல்வம் விரும்புவோர் அச்சக்தியைத் திருமகளாகக் கண்டனர் என்று தேவியை வழுத்துகின்ருர் கிழக்கிலங்கை ஈன்றெடுத்த துறவி விபுலானந்தர். அவ்வப் பொருளை அருளும் தலையில் அவ்வச் சக்திகள் நிலைமைவாய்ந்தனவாகத் துதிக்கப்படுகின்றன.

### குமரகுருபரர் காட்டும் விற்பன்னக் கற்பனைகள்

அவ்வவ் வரங்களை அருளும் நிலையில் அவ்வச் சக்திகளை தலைசிறந்தனவாகத் தோத்திரித்தல் புலவரியல்பு. இமயக்குமரியைத் தோத்தரிக்க குமரகுருபரர் தன்னெப்பில்லா மீனுட்சிபிள்ளைத் தமிழை நம்மவர்க்குத் தந்துள்ளார்.

"..........
..........வெண்சோதி
கலைமதி மரபிலொ ரிளமதி
எனவளர்
தன்றே என்றேதும்
திருமகள் கலைமகள்
தலைமகள் மலைமகள்
செங்கோ செங்கீரை......"
(மீனுட்சி அம்மைபிள்ளைத் தமிழ்
செங்கீரை 9 ஆம்பா)

சந்திரகுலப் பாண்டிய மன்னர் மரபில் தேவி என்றும் இளமைகுன்று ஒரு சின்னஞ்சிறு சந்திரஞக வளருகின்ருள் என்று திருமகளும் கலைமகளும் தோத்தரிக்கின்ருர்களாம். அத்தகைய தலைமகளாகிய மலைமகளே நீ செங்கீரையாடுக என வேண்டிப் பாடுகின்ருர் குமரகுருபரர்.

..."முகரக் களிவண் டடை
கிடக்கும்
முளரிக் கொடிக்கும் கலைக்
கொடிக்கும்
முருந்து முறுவல் விருந்திடு
புன்
முரல் செடுவண் ணில வெறி
ப்ப
மகரக் கருங்கண் செங்கனி
வாய்
மடமான் கன்று வருகவே..."

எனத் தம்மிடம் தேவியை அடிபெயர்த்தோடி வருமாறு முனிவர்பிரான் வேண்டுகின்ருர். ரீங்காரம் செய்யும் வண்டுகள் அடைகிடக்கின்றசெந்தாமரை மலர்த்தேவி இலக்குமியும் கலைத்தேவி வாணியும் நம் மீனுட்சியாம் தேவியை அன்பொழுகப் பார்க்கின்றனர். அவர் தம் அன்பைமெச்சி அம்மையார் மயிலிறகின் அடிக்குருத்து (முருந்து)ப் போன்ற பல்வரிசையால் புன்முறுவல் செய்கின்ருள். அம்முறுவல் சந்திரிகை போலப் பரவி இரு தேவியருக்கும் பெருவிருந்தாக அமைகின்றது. மகரமீன் போன்ற கண்ணையும் கொவ்வைக் கனி போன்ற வாயையுமுடைய தேவி துள்ளு நடை போடுவதால் அவளைபபெடைமான்கன்றென விளித்து முனிவர் தம்மிடம் ஓடிவருமாறு கேட்கின்ருர். தேவியைப் பெடைமானுகக் கண்ட குமரகுருபரர் கற்பனை நயஞ்சிறக்க அவளை ஒரு மயிலாக நம்முனங்களில் கூறக் காட்டுகின்ருர். மயில்னங்கள் இரவிலே உயர் மரக் கொம்புகளிலே உறங்குவன. ஆனுல் அம்மையோ..." பசிசொளிய மரகதத் திருமேனி பச்சைப் பசுங்கதிர் ததும்ப மணிவாய்த் தெண்ணிலா விரிய நின்ருடும் பசுந்தோகை (செங்கீரைப் பருவம் 2 ஆம் பா) ஆக முனிவருக்குக் காட்சி கொடுக்கிருள். மயில் பசுமை செறிந்த குறிஞ்சி நிலத்துப் பறவை. அதன் பசும் மேனி மரகதக் கதிர் விரிக்கும் இயல்பினது அகனுல் அதன் சாயல் மெத்தென்றிருக்கும். தம்திருமேனி சொரியும் பச்சொளியின் உற்சாகத்தால் அம்மை முறுவல் செய்கின்ருள். செம்மாணிக்கம் போன்ற வாயிதழின் ஊடாக பல்லின் வரிசை காணும் ஒளி நிலாக் கதிர்போல ஒளிர அம்மை அசைந்தாடுங் காட்சி அம்மையை பகலொளிக்குப் பதிலாக உலகியலுக்கு மாருக நிலவொளியில் ஆடும் பச்சின மயிலாக்கி விடுகின்றது. இம்மயிலை அற்புதமாகநமக்குக்காட்டுகின்ருர் குருபரசுவாமிகள்.

பிணைமானுக பசும் மயிலாக அம்மையை நமக்குக் காட்டிய முனிவர் மீனுட்சி அம்மையாரை கற்பனை நயம் மீறிப் பாயும் வகையிலே விந்தகச் சொற்களாலே ஒரு பச்சின வஞ்சிக் கொடியாகவும் காட்டி அற்புதவயப்படுத்துகின்ருர்.

"...... மதுரகம் வாய்
மடுக்கும் குழற்கா டேந்து
மிள
வஞ்சிக் கொடியே வருகவே"
(வருகைப் பருவம் 9 ஆம்பா)

நாங்கள் பெருங் காட்டினூடே முதிர்ந்த மரங்களின் மீது தாவி மேற்சென்று தோற்றமளிக்கும் கொடிவகைகளைக் கண்டிருக்கின்ருேம். இங்கோ ஒரு புதுவிதக் கொடியைக் காணுகிருேம். அதுவோ தன்னிடம் காட்டினை ஏந்தியபடியே நிற்கின்றது. மெல்லிய சாயலுடைய அம்மையாரின் தலைக்கண் கறுத்து அடர்ந்து செறிந்து செழித்துள்ள கூந்தலே இங்கு காடாக உருவகிக்கப்பட்டிருக்கின்றது. கொடிக்கண் (பூவிலே)வண்டு வீழுதற்குப் பதிலாக வண்டு காட்டிலே அல்லவா வண்டு வீழ்ந்து தடுமாறுகின்றது.

### கற்பனையின் சிகரம்

குமரகுருபரர் கற்பனை கனியக் காட்டும் இந்த அடியைப் படிக்கும்போது சொற்சுவையும் பொருட்சுவையும் தோய்தர வாணியருளால் அவன் மீது அவர் பாடியருளிய பாடலொன்று பல்வகைச் சிறப்புடனும் நம்முன் பளிச்சிடுகின்றது. அது வருமாறு:-

நாடும் பொருட்சுவை சொற்
சுவை தோய்தர நாற்கவியும்
பாடும் பணியிற் பணித்த
ருள் வாய்பங்க யாசனத்திற்
கூடும் பசும் பொற்கொடியே
கனதனக் குன்றுமைம்பாற்
காடும் சுமக்குங் கரும்பே
சகல கலாவல்லியே.

இக்கலாவல்லிமாலையிலே ஒரு பசுங்கொடி (மார்பகமாகிய) இருகுன்றினையும் ஐந்து காட்டினையும் தாங்கும் அதிசயக் கற்பனை நயம்மிளிர் தலைப் படித்துத் தேவியருள் பெற்று உய்வோமாக!

### ஐயாறன் எழுதுவது

ஒருவர் கறுப்புப் பணம் சம்பாதித்து, புது வீடு கட்டினுராம். வீடு கட்டிய சில மாதங்களில் அவருக்கு நெஞ்சு வருத்தம் வந்து ஆஸ்பத்திரியில் கிடந்து இறந்துவிட்டதாகவும், கடைசிவரை அவருக்கு மன நிம்மதி இல்லை என்றும் ஓரன்பர் வந்து சொன்னுர். பாவம்!

நேர்மையற்ற வழிகளிலும் எப்படியாவது அதிக பணம் சம்பாதிக்கவேண்டுமென்றும் வாழ்க்கையின் வெற்றியும் இன்பமும் அதில்தான் இருக்கிறதென்றும் நம்மில் பலர் நினைக்கின்றேம், கள்ளம் எப்படியோ ஒரு நாள் வெளியாகிவிட்டால் அரசாங்க தண்டனை கிடைக்கிறது. பிடிபடாமல் தப்பிவிட்டாலும், நம் நெஞ்சே நம்மைச் சுட்டு, மன அமைதி இல்லாமற் செய்கின்றது. அதனுல் கவலையும் நெஞ்சுவருத்தமும் ஏற்பட்டு, உயிருக்கே ஆபத்தாக முடிகின்றது.

அந்த அன்பர் கூறிய கதை உண்மையானுல், இதெல்லாம் நமக்கு நல்ல பாடமாகும். கள்ள வழிகளில் நேர்மையின்றி பணம் திரட்டி, புது வீடுகட்டியும் என்ன பயன்? ஊரெல்லாம் கெட்ட பெயர், தனக்கே நிம்மதியில்லை. மன நிம்மதி இன்றி பெரிய மாளிகையில் வசிப்பதைவிட, மனச்சாந்தியுடனே குடிசையில் வசிப்பது மேலாகுமல்லவா? கள்ளத்தனங்கள் செய்து பணம் ஈட்டுபவர் உண்மையில் தங்களுக்குத் தாங்களேதான் தீங்கு செய்துகொள்ளுகின்ருர்கள். இதை உணர்ந்தால், யாரும் நேர்மையின்றிப் பணம் சேர்க்க எண்ணுவார்களா?

* * *

கிரிதாரி ஆலையைத் தாம் வாங்கவேண்டி ஏற்பட்ட காரணத்தை டாக்டர் என். எம். ஒரு கூட்டத்தில் விளக்கியிருக்கின்ருர். ஏரிக்கரைப்பத்திரிகையில் இதுபற்றி வெளியான ஒரு செய்தி உண்மையானுல், பொதுவாக நாம் நமது அரசியல்வாதிகளைப்பற்றி மிக அனுதாபப்பட்டு, அவர்களுக்கு ஏதாவது செய்யவேண்டும்.

"அரசியல் வாழ்விலே ஈடுபட்ட காரணமாக நான் வசிக்கும் வீடு உள்விட்டு என் உடைமைகள் எல்லாவற்றையும் விற்கவேண்டியதாயிற்று. இன்னும் 5 அல்லது 6 வருடங்களுக்குமேல் நான் அரசியலில் ஈடுபட்டிருக்க முடியாது. அரசியலிலிருந்து விலகியபின் பிச்சை எடுத்து வாழ விரும்பாததால் நான் வங்கியில் கடன் வாங்கி இந்த ஆலையை வாங்கினேன். லஞ்சம் வாங்கிப் பிழைப்பதைவிட இவ்விதம் ஒரு மில்லை வாங்கி நடத்துவது நல்லதல்லவா?" என்று கேட்கின்ருர்.

இலங்கையிலே முன்னர் கல்வி அமைச்சராக இருந்து, இலவசக் கல்வித் திட்டத்தை அமுலுக்குக் கொணர்ந்தவர், இப்போது வயோதிபத்தில் பிறர் கையை எதிர்பார்த்து வயிற்றைக் கழுவவேண்டியவராக இருக்கின்ருராம். அவருக்கு விசேஷமாக ஏதோ உதவி அளிக்கவேண்டுமென்று பார்லிமெண்டிலே ஒரு யோசனை வந்தது. நாட்டுக்காகச் சிறை சென்ற தியாகிகளுக்கு, ஐந்து ஏக்கர் விளை நிலம் அளிக்கவேண்டுமென்று ஒரு திட்டம் சென்னை ராஜ்யத்தில் அமுல் நடக்கிறது. அந்த மாதிரி இங்கும் ஜீவனத்துக்கு வேறு வழியற்ற மாஜி எம். பி. மார்களுக்கு ஏதாவது உதவித் திட்டத்தை ஏற்படுத்துவது, நன்றியுள்ள மக்களின் கடமையாகுமல்லவா?

தேர்தலுக்காக அவர்கள் செலவழிக்கும் பணம் கொஞ்சமன்று. பலர் தங்கள் வீடு வாசல் தோட்டம் முதலிய ஆஸ்திகளையும் இழந்திருக்கிருர்கள். இவ்வளவு தியாகமும் எதற்காக? எல்லாம்

(4-ம் கலம் பார்க்க)

(5-ம் கலத் தொடர்ச்சி)

பொதுமக்களாகிய நமக்காகத் தானே! ஆகவே எம். பி. க்களுக்கு ஒரு பென்ஷன் திட்டத்தையோ, அல்லது இன்ஷியூரன்ஸ் திட்டத்தையோ டாக்டர் என். எம். கொண்டு வருவது அவசியமாகும். அப்படி ஒரு திட்டம் வந்தால், அவர் உள்வீட்டு யாரும் பிச்சை எடுக்கவோ அல்லது கடன்பட்டு முதலாளியாகவோ வேண்டி இராது.

* * *

உள்ளம் குளிராதோ?—
பொய்யாணவ, ஊனம் ஒழியாதோ? கள்ளம் உருகாதோ?
அம்மா பக்திக் கண்ணீர் பெருகாதோ?—வெள்ளக் கருணையிலே— இந்நாய் சிறுவேட்கை தவிராதோ? விண்ணொற்கரிய வளே—அனைத்திலும் மேவியிருப்பவளே!

— மகாகவி பாரதியார்.

மண்டலசார்பற்ற மகாநாடு

# ஏகாதிபத்தியத்தின் புதிய வடிவம் குறித்து தலைவர்கள் கண்டனம்

## 'அன்னியதளங்கள் இருக்கும்வரை உடனிருந்துவாழ்வதுசாத்தியமா?'

— சுகர்னோ

### காலஞ் சென்ற நேருவுக்கு மேலும் தலைவர்கள் புகழ்மாலை

கெய்ரோ, அக். 7

மண்டலசார்பற்ற மகாநாட்டின் 2-வது நாள் கூட்டத்தில் நேற்று சர்வதேச நிலைமை குறித்து விவாதம் நடைபெற்றது. பழைய ஏகாதிபத்தியம் புதிய உருவில் இன்னும் தொடர்ந்து இயங்கிக்கொண்டிருப்பதாக மகாநாட்டில் பேசிய பல தலைவர்கள் கூறினார்கள்.

ஈராக் அதிபர் ஆரீப் பேசுகையில், ஆபிரிக்காவிலும், ஏடன், அங்கோலா, மொஸாம்பிக் ஆகிய நாடுகளிலும் ஏகாதிபத்திய அட்டூழியம் நடத்தி வருவது குறித்துக் குறிப்பிட்டார்.

லெபனன் அதிபர் பாலஸ்தீனப் பிரச்னை பற்றி பிரஸ்தாபித்தார்.

"ஏகாதிபத்தியம் இன்னும் அபாயமான நிலையில் விளங்கி வருகிறது" என ஆப்கானிஸ்தான் பிரதமர் குறிப்பிட்டார். தென்கிழக்காசியப் பிரச்னைகளில், சம்பந்தப்பட்ட நாடுகள் சந்தித்துப் பேசுவதை தமது நாடு வரவேற்பதாயும் அவர் கூறினர்,

டுனிஸிய அதிபர் போர்கீபா பேசியபோது ஏழை நாடுகளுக்கும், செல்வர் நாடுகளுக்குமிடையேயுள்ள வித்யாசத்தைக் குறைக்க மகாநாடு பணியாற்றுவதில்தான் அதன் வெற்றி தங்கியிருக்கிறது என்ளூர்.

யூகோஸ்லேவிய அதிபர் டிட்டோ பேசுகையில், ஆயுதப் பரிகரணத்துக்கு விசேஷ உலகமகாநாட்டின் மூலம், அல்லது ஐ. நா. மூலம் முயற்சிக்க வேண்டும் எனக் கூறினர். தென்கிழக்காசியா, காங்கோ கியூபா ஆகிய நாடுகளில் அன்னிய குறுக்கீடுகளும், முகாந்திரமற்ற ராணுவக் குறுக்கீடுகளும் இருப்பதாயும், சைப்ரஸில் வெளிநிர்ப்பந்தம் இருப்பதாயும், டிட்டோ கூறினர். தென்னுபிக்கா மீது பொருளாதாரத் தடை மேற்கொள்ளப்படவேண்டும் என்றும் அவர் கோரினர்.

இந்தோனேஷிய அதிபர் டாக்டர் சுகர்ணே பேசியபோது, பழைய ஏகாதிபத்தியம் புதிய முறைகளை அனுஷ்டித்து வருவதாய்க் குறிப்பிட்டார்.

"மண்டலசார்பற்ற மகாநாடு மனித சமுதாயத்திற்கு சேவை புரிவதற்காகக் கூடியிருக்கிறது. பெல்கிரேட்டில் நடைபெற்ற முதலாவது மகாநாட்டிற்குப் பின் உலகில் அதிக மாற்றம் ஏற்பட்டுவிடவில்லை. பழைய ஏகாதிபத்தியம் இன்னும் வலிமை பொருந்தியதாய் இருக்கிறது. பிற நாடுகளின் அரசியல் — பொருளாதாரத் தலையீடற்ற சுதந்திரமே ஒரு நாட்டின் உண்மையான சுதந்திரமாகும். ஆனல் புதிதாகச் சுதந்திரமடைந்து வரும் நாடுகள் மீது வெளித் தலையீடுகள் இருக்கின்றன, மலேஷியா, தூரகிழக்கு, மத்தியகிழக்கு, சைப்ரஸ், ஏடன் ஆகிய இடங்களில் இன்னும் பழைய ஆதிக்கம் இருக்கிறது. பழைய தளங்கள் இங்கு இருக்கும்போது உடனிருந்து வாழ்வது எவ்வாறு சாத்தியம்" எனவும் டாக்டர் சுகர்ணே கூறினர்.

காலஞ்சென்ற திரு. நேருவுக்கு நேற்று பல தலைவர்கள் புகழாஞ்சலி செலுத்தினர். டாக்டர் சுகர்ணே பேசிய சமயம், "அவரைப் பற்றி நினைக்கும் போது எனது உணர்ச்சிகளையும், வருத்தத்தையும் அடக்கிக்கொள்ள முடியவில்லை. சமாதானத்தின் மாபெரும் சக்தியாகவும், மாபெரும் தலைவராகவும் திரு ஜவஹர்லால் நேரு விளங்கினர். எனது வெகுமதிப்பைப் பெற்ற நேரு, சமாதானத்திற்காக அயராது பாடுபட்டார்" எனக் குறிப்பிட்டார். டிட்டோவும் காலஞ்சென்ற நேருவைப் போற்றிப்புகழ்ந்தார்.

லாவோஸ் பிரதமர் சுவர்ண பூமா பேசுகையில், லாவோவின் நடுநிலைமையைப் பராமரிக்க இந்தியா அளித்த உதவிக்காக அந்நாட்டுக்கு நன்றி தெரிவித்துக்கொண்டார்.

இந்தியப் பிரதமர் சாஸ்திரி இன்று மகாநாட்டில் உரை நிகழ்த்துகிருர்.

பிரதமர் சாஸ்திரி நேற்று எதியோப்பிய சக்கரவர்த்தி, அல்ஜீரிய ஜனாதிபதி, ஏமன் அதிபர் ஆகியோரைச் சந்தித்துப் பேசினர்.

காலனி ஆதிக்கம் சம்பந்தமாகவும், இதர பல விஷயங்கள் குறித்தும் இந்தியா கொண்டுவந்த தீர்மானங்கள் அனைத்தும் மகாநாட்டின் அரசியல் கமிட்டியில் ஏற்றுக் கொள்ளப்பட்டதாய் அறிவிக்கப்படுகிறது. இரு கமிட்டிகளும் அநேகமாக இந்தியாவின் எல்லா தீர்மானங்களையும் ஏற்றுக்கொண்டதாக வெளிநாட்டு மந்திரி சுவர்ண் சிங் கூறினர்.

## "கெய்ரோவில் நான் கைதியாக நடத்தப்பட்டேன்"

### திரு. ஷோம்பே ஏமாற்றத்துடன் காங்கோ திரும்புகிருர்

கெய்ரோ, அக். 7

மண்டலசார்பற்ற மகாநாட்டில் அனுமதி மறுக்கப்பட்ட காங்கோ பிரதமர் ஷோம்பே, தான் இன்று காலை கெய்ரோவை விட்டுத் தாயகம் புறப்படுவதாகக் கூறினர். திரு. ஷோம்பே ஜனாதிபதி நாஸருக்கு எழுதியுள்ள கடிதம் ஒன்றில் தாம் கெய்ரோவில் ஒரு கைதியைப் போல் நடத்தப்பட்டதாகக் குற்றஞ்சாட்டியிருக்கிருர்.

மகாநாட்டில் கலந்துகொள்ளும் நாடுகளின் "பகைமை மனப்பான்மை"யை அவர் குறிப்பிட்டு, மகாநாட்டில் தாம் கலந்துகொண்டால் அதனுல் தீமை விளையுமென்ற குற்றச்சாட்டுகளை மறுத்தார்.

ஆபிரிக்க நாட்டுப் பிரதிநிதிகள் நேற்றுத் தனியாக ஒரு கூட்டம் நடத்தி திரு ஷோம்பேயை மகாநாட்டில் அனுமதிக்கக்கூடாதென்றும் அப்படி அனுமதித்தால் தாங்கள் வெளியேறி விடப்போவதாயும் எச்சரிக்கை விடுத்தனர். இந்தப் பிரதிநிதிகளின் முடிவு ஷோம்பேய்க்குத் தெரிவிக்கப்பட்டது. எனினும் காங்கோ சார்பாக ஜனாதிபதி கஸவுபு மகாநாட்டில் பங்குபற்ற வேண்டுமென அழைப்பு விடுக்கப்பட்டது.

ஆனல் கஸவுபு மகாநாட்டுக்கு அனுப்பிய ஒரு செய்தியில் ஷோம்பே தலைமையிலான காங்கோ தூதுகோஷ்டி அவமதிக்கப்பட்டதால் தாம் பங்குபற்றுவதற்கு முடியாதென்றும் காங்கோ தூதுகோஷ்டியில் யார் இடம்பெற வேண்டுமெனப் பிரதமர் உத்தரவிடமுடியாதென்றும் கூறியிருக்கிருர்.

கெய்ரோவில் ஷோம்பே தங்கியிருந்த மாளிகையைச் சுற்றித் துருப்புகளும், பொலிஸாரும் காவல்நின்றனர். காங்கோ ராஜதந்திரிகள்கூட திரு. ஷோம்பேயைப் பார்ப்பதற்கு 7 மணிநேரம் காத்துக் கிடந்தபின்பே சந்திக்கமுடிந்தது. ஷோம்பே வெளியில் செல்ல அனுமதிக்கப்படவில்லை. அவரைச் சந்திக்க எவரும அனுமதிக்கப்படவும் இல்லை.

எனினும் ஐக்கிய அராபியக் குடியரசின் வெளிநாட்டு மந்திரி நேற்று மாளிகைக்குள் திரு. ஷோம்பேயைச் சந்தித்து நிலைமையை அவரிடம் விளக்கி வருத்தம் தெரிவித்தார்.

திரு. ஷோம்பேயை மகாநாட்டுக்கு வரவேண்டாமெனக் கூறப்பட்டபோதிலும் அவர் எதியோப்பிய விமானம் ஒன்றில் கெய்ரோ வந்தது பல பத்திரிகைகளுக்கு ஆச்சரியத்தை உண்டாக்கியது.

ஷோம்பே கெய்ரோ வந்தது இந்த நகரில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியதாயும், திரு. லுமும்பாவின் மரணத்திற்கு அவரே பொறுப்பேற்கவேண்டுமென்றும் பல மகாநாட்டுப் பிரதிநிதிகள் கண்டனம் தெரிவித்ததாயும் கூறப்படுகிறது.

அதேசமயம் காங்கோ தலைநகர் லியப்போல்ட்வில்லியிலுள்ள ஐக்கிய அராபியக் குடியரசுத் தூதராலயத்தையும் அல்ஜீரியத் தூதராலயத்தையும் சுற்றிப் பெருமளவில் ராணுவத்தினர் வளைத்துக் கொண்டிருப்பதாக அறிவிக்கப்பட்டது. எவரும் உள்ளே செல்லவோ, வெளியே செல்லவோ அனுமதிக்கப்படவில்லை. கெய்ரோவில் பிரதமர் ஷோம்பே நடத்தப்பட்ட விதத்திற்கு இது பதில் நடவடிக்கையென வருணிக்கப்படுகிறது.

## அமெரிக்க 88வது காங்கிரஸ்

வாஷிங்டன், அக். 7

தொடர்ச்சியாக 21 மாதங்கள் கூட்டம் நடத்திய பின் கடந்த சனிக்கிழமை அமெரிக்க காங்கிரஸ் தனது 88வது கூட்டத்தை முடித்துக்கொண்டது. இதையொட்டி ஜனாதிபதி ஜோன்சன் அளித்த பாராட்டை 535 அங்கத்தினர்களும் செவிமடுத்தனர்.

பிரதிநிதிகள் சபையும், செனட்டும் ஒத்திவைக்கப்பட்ட பின் ஜனாதிபதி விடுத்த அறிக்கை ஒன்றில் அமெரிக்க சரித்திரத்தில் 88வது காங்கிரஸ் முக்கியமானது எனக் குறிப்பிட்டிருக்கிருர்.

செனட்டர் மைக்மென்ஸ்பீல்ட் பேசுகையில் ஜனாதிபதி ஜோன்ஸன் 51 சிபார்சுகளை காங்கிரசுக்கு அனுப்பியிருந்தார் என்றும் எல்லாவற்றுக்கும் செனட் சபை ஆதரவு தெரிவித்ததென்றும், பிரதிநிதிகள் சபை அவற்றில் பெரும்பாலானவற்றிற்கு ஆதரவு தெரிவித்ததென்றும் கூறினர்.

## குருஷ்சேவுடன் பாக். எம். பி. க்கள்

மாஸ்கோ, அக். 7

15 பாகிஸ்தான பாராளுமன்ற அங்கத்தினர்கள் சோவியத் பிரதமர் குருஷ்சேவைச் சந்தித்து, ஜனாதிபதி அயூப்கானின் நல்லுறவுச் செய்தி ஒன்றை வழங்கியதாகவும், சோவியத் பிரதமருடன் அவர்கள் ஒரு மணிநேரம் பேசியதாயும் அறிவிக்கப்படுகிறது.

வார்தா, அக் 7

ஆச்சார்யா வினேபாபாவே தற்போது பூரணமாகக் குணமடைந்துவிட்டதால் இம் மாதம் 15ந் தேதி மீண்டும் பூதான யாத்திரையை ஆரம்பிக்கவிருக்கிருர்.

## "இந்திய-சீன எல்லைப்பிரச்னையை தீர்க்க தொடர்ந்து முயற்சிக்க வேண்டும்

### பாகிஸ்தானுடனன தகராறு வெளி நிர்ப்பந்தமின்றி பேசித்தீர்க்க வேண்டும்"

நாஸர்-சாஸ்திரி கூட்டறிக்கை விபரம்

கெய்ரோ, அக். 7

சீன-பாரத எல்லைப் பிரச்னையை கொழும்பு யோசனையின் அடிப்படையில் தீர்க்க முடியாமலிருப்பது குறித்துத் தாம் வருந்துவதாயும், நேச நாடுகள் தொடர்ந்து இப்பிரச்னையை அமைதி வழியில் தீர்க்க முயற்சி செய்ய வேண்டும் என்றும் ஜனாதிபதி நாஸர் தெரிவித்திருக்கிருர். இந்திய-பாகிஸ்தான் வேற்றுமை வெளி நிர்ப்பந்தமின்றி பேச்சுவார்த்தை மூலம் தீர்க்கப்படுமென நம்பிக்கை கொண்டிருப்பதாயும் அவர் மேலும் கூறியிருக்கிருர்.

இந்தியப் பிரதமர் சாஸ்திரிக்கும், எகிப்திய ஜனாதிபதி நாஸருக்குமிடையே நடைபெற்ற சம்பாஷணையைத் தொடர்ந்து நேற்று கெய்ரோவில் வெளியிட்ட கூட்டறிக்கையில் மேற்கண்டவாறு கூறப்பட்டிருக்கிறது.

சகல எல்லைப் பிரச்னைகளும் சமாதானப் பேச்சுவார்த்தை மூலமே தீர்க்கப்பட வேண்டும் என்றும் பலாத்காரம் மூலம் தீர்க்கப்படாது என்றும் இரு தலைவர்களும் வலியுறுத்தியிருக்கிருர்கள்.

உலகப் பிணக்குகளைக் குறைக்கவும், சமாதான சக்திகளை வலுப்படுத்தவும் மண்டலசார்பற்ற மகாநாடு உதவி புரியும் என அவர்கள் நம்பிக்கை தெரிவித்திருக்கிருர்கள்.

ஜோர்டான் நதி தண்ணீரில் அரபுநாடுகளின் நியாயமான உரிமைகளையும், பாலஸ்தீன அகதிகளின் உரிமையையும் இந்தியா ஆதரிக்கிறது என திரு. சாஸ்திரி கூட்டறிக்கையில் தெரிவித்திருக்கிருர், ஆபிரிக்க நாடுகள் பல சுதந்திரம் பெற்றுவருவதையும், இந்த நாடுகளுக்கிடையே ஒற்றுமையும் ஒத்துழைப்பும் ஏற்பட்டு வருவதையும் அவர் வரவேற்றிருக்கிருர்.

காலனி ஆதிக்கத்துக்கு இருதலைவர்களும் கண்டனம் தெரிவித்திருக்கிருர்கள். தென்னுபிரிக்கா, அங்கோலா, மொஸாம்பிக், ஏடன், தென் அரேபியா, தென்ரொடிஷியா ஆகிய நாடுகளிலுள்ள தேசிய இயக்கத்தின் போராட்டங்களையும் இருதலைவர்களும் ஆதரிப்பதாகக் கூறியிருக்கிருர்கள்.

பலனுள்ள ஒரு சர்வதேச கட்டுப்பாட்டின்கீழ் படைக்கலைப்பு மேற்கொள்ள வேண்டியது மிகவும் முக்கியமானது என கூட்டறிக்கையில் வற்புறுத்தப்பட்டிருக்கிறது. இந்தியா, ஐக்கியஅராபியக் குடியரசு ஆகிய இருநாடுகளின் நெருங்கிய ஒத்துழைப்பைத் தொடர்ந்து வலியுறுத்தும் உறுதியையும் இரு தலைவர்களும் தங்கள் கூட்டறிக்கையில் தெரிவித்துக் கொண்டிருக்கிருர்கள்.

காஷ்மீரைப்பற்றி ஜனாதிபதி நாஸர் நேரடியாக எதுவும் குறிப்பிடாவிடினும் இந்தியா பாகிஸ்தான் தகராறு வெளிநிர்ப்பந்தமின்றி பேச்சுவார்த்தைமூலம் தீர்க்கப்பட வேண்டும் என அவர் கூறியிருப்பது மிக முக்கியத்துவம் வாய்ந்தது என அவதானிகள் கருதுகிருர்கள்.

அதேபோல் சீன-இந்தியப் பிரச்னைபற்றி அவர் குறிப்பிட்டிருப்பது கொழும்பு யோசனைகளை சீனு ஏற்கவேண்டும் என வற்புறுத்தும் நிலையில் முக்கியத்துவம் வாய்ந்தது எனக் கருதப்படுகிறது.

### ஜெனிவா மகாநாடு

இதற்கிடையில் சீன-இந்தியப் பிரச்னையைத் தீர்க்கும் பொருட்டு புதிய ஜெனிவா மகாநாடு ஒன்று நடைபெற வேண்டும் என் மண்டலசார்பற்ற மகாநாட்டில் ஒரு நாடு தீர்மானம் கொண்டுவந்திருப்பதாய் அறிவிக்கப்படுகிறது.

## கமிட்டி நிறுவப்படும்

கொழும்பு, புதன்

நீர்ப்பாசன இலாகாவின் இயந்திரப் பகுதிபற்றி விசாரணை நடத்துவதற்கு கமிட்டி ஒன்றை, நீர்ப்பாசன மந்திரி திரு. சி பி. டி' சில்வா விரைவில் நியமிப்பார் எனத் தெரிய வருகிறது. இயந்திரப் பகுதியை புனரமைப்புச் செய்யவும், கூடிய உபகரணங்களை உற்பத்தி செய்யவும் வேண்டிய வழிவகைகளைச் செய்ய இந்த கமிட்டி சிபார்சுகள் செய்யும்.

## அபிவிருத்தி செய்ய ஆலோசனை

கொழும்பு, புதன்

சப்ரகமுவ பகுதியையும் கண்டி கமக்கார குழுவின் கீழ் கொண்டுவரவேண்டுமென்பது பற்றி உள்ளூராட்சி ஸ்தலஸ்தாபன மந்திரி திரு ஏ. பி. ஜெயசூரியா ஆலோசித்துவருவதாகத் தெரிகிறது. கண்டி மாவட்டத்தில் அபிவிருத்தி நடைபெறுவதுபோன்று சப்ரகமுவ மாகாணத்திலும் அபிவிருத்திகள் செய்யும் நோக்குடனேயே இந்த ஆலோசனை கூறப்பட்டுள்ளது. இந்த ஆலோசனையை அந்த மாகாண பாராளுமன்ற அங்கத்தவர்கள் தெரிவித்திருக்கின்றார்கள்.


7வது வெற்றி வாரம்!

ஸ்ரீ மனோகரா

(யாழ்ப்பாணம்) போன்: 425

தினசரி 6-30 9-30க்கு மட்டும்

சனி, ஞாயிறு 4 காட்சிகள்

பாலசர்மா ● அசோகன்

டி.கே. பகவதி ● நரசிம்மபாரதி

ஜெயஸ்ரீ ● விஜயலக்ஷ்மி

மற்றும் பலர் நடித்த

சம்பூர்ண மகாபாரதம்



REGAL — JAFFNA

NOW SHOWING

Sonja Wilde

in

I PASSED FOR WHITE


## கூட்டுஸ்தாபனம் வீடுகள் அமைக்கும்

கொழும்பு, புதன்

தொழில், வீடமைப்பு மந்திரி திரு. எம். பி. டி. இஸட் சிறிவர்த்தனவினால் தயாரிக்கப்பட்ட 2000 மாடிவீடுகள் திட்டத்தை இலங்கை எஞ்ஜினியரிங் கூட்டுதாபனம் அதி விரைவில் ஆரம்பிக்கும் என்று தெரியவருகிறது.

மிகுதியான 3000 வீட்டுத் திட்டத்தை பொதுமராமத்து இலாகா பொறுப்பேற்று இரத்மலானையில் அதன் வேலைகளை ஆரம்பிக்கும்.

## கடல் அரிப்பு அபாயம்

சுழிபுரம், புதன்

திருவடி நிழல் கரையோரத்தில் மணல் அள்ளுவோர் தொகை அதிகரித்து வருகின்றது. தினமும் சுமார் 1000 தொன்னுக்கு மேற்பட்ட மணல் அள்ளப்பட்டு வருகின்றது. மணல் விற்பவர்கள் போட்டி போட்டுக்கொண்டு மணலை அள்ளுகிறார்கள். இதனால் கடல் அரிப்பு உண்டாகி பயங்கர விளைவுகள் ஏற்படலாம் என கிராமவாசிகள் அஞ்சுகின்றனர்.

## அனலைதீவில் காந்தி ஜெயந்தி

யாழ்ப்பாணம், வியா.

அனலைதீவு காந்திய சேவா சங்கத்தின் ஆதவில் சென்ற வெள்ளிக்கிழமை காந்தி ஜெயந்தி விழா கொண்டாடப்பட்டது. மத்திய சனசமூக நிலையத்தில் திரு. க. சிவபாதசுந்தரம் தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் திரு. வே. குமாரசாமி, திரு. க. இரத்தினசபாபதி, திரு. க. இளையதம்பி ஆகியோர் சொற்பொழிவாற்றினர்.

## புதிய தலைவர்

கொடிகாமம், புதன்

கொடிகாமம் கிராம முன்னேற்றச்சங்கத்தலைவரும், முன்னாள் தபாற்கந்தோர் அதிபருமான திரு. அ. சுப்பிரமணியம் கொடிகாமம் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தலைவராகத் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.


மங்களகரமான 2வது வாரம்!

சென்ட்ரல் பிளாஸா நவா

(கொழும்பு) (வெள்ளவத்தை) (கொம்பனித்தெரு)

டுபிலக்ஸ் வெலிங்டன் ராஜ்

(நுகேகொடை) (யாழ்ப்பாணம்) (சீகொழும்பு)

வெம்பிளி விஜயா ஸ்ரீ நேஷனல்

(கண்டி) (மட்டக்களப்பு) (திருமலை)



எம். ஜி. ராமச்சந்திரன் - சரோஜாதேவி

மற்றும் பலர் நடிக்கும்

பணக்கார குடும்பம்


## தொழில் நுட்ப கல்வி இலாகா

கொழும்பு, புதன்

புதிதாக ஸ்தாபிக்கப்பட்ட தொழில் நுட்பக் கல்லூரி இலாகா அதன் வேலைகளைச் சென்றவாரம் தொழில் நுட்பக் கல்லூரி இருக்கும் இடத்தில் தொடங்கியது.

முன்னாள் தேசாதிபதியின் காரியதரிசி எஸ். ஜே. வல்பிட்ட இந்தப் புதிய இலகாவின் நிர்வாகியாகக்கடமையாற்றுகின்றார்.

## கல்வி ஆலோசனை சபை

கொழும்பு, புதன்

18 பேர் கொண்ட பார்லிமெண்டரி கல்வி ஆலோசனை சபை ஒன்று நியமிக்கப்பட்டுள்ளது. கல்வி மந்திரி இதன் தலைவராவர். 4 செனட்டர்களும் 14 எம். பி. க்களும் இதில் அங்கம் வகிக்கின்றனர். சென்றமுறை கல்வி ஆலோசனைச்சபையில் 14 பேர்களே அங்கம் வகித்தனர்.

## வானொலிநிகழ்ச்சிகள்

### கொழும்பு

### வியாழன் 8-10-64

(செய்திகள்: காலை 7-00, பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00)

காலை 6-45 உதயகீதம், 6-50 சைவநற்சிந்தனை, 6-55 இஸ்லாமிய நற்சிந்தனை, 7-15 பாட்டு, 7-45 மெல்லிசை, 8-15 இஸ்லாமிய கீதங்கள்.

பகல் 12-00 சித்திரகானம், 1-00 கதம்ப இசை.

மாலை 5-00 பிறந்ததின வாழ்த்துக்கள், 5-15 சிறுவர் மன்றம், 5-45 திரை இசை.

இரவு 6-15 கிராமசஞ்சிகை, 6-45 கிளாரினெட், 7-15 நேயர் விருப்பம், 7-45 நாடகம்—'கடவுள் நல்லவர்'-பா. பாலேஸ்வரி எழுதியது 8-00 முஸ்லிம் நிகழ்ச்சி, 9-15 இசைப் பயிற்சி, 9-30 வீணை—கே. சரஸ்வதி, 10-00 பாட்டு.

### திருச்சி

(செய்திகள்: காலை 7-15, பகல் 2-00, இரவு 7-15)

காலை 6-30 மங்கள இசை, 6-50 வாத்திய இசை, 6-55 அருள்வாக்கு, 7-00 துதிப் பாடல்கள், 7-30 அம்பாள் பிள்ளைத் தமிழ்ப் பாடல்கள்.

பகல் 12-00 தொழிலாளர்களுக்கு, 1-00 திரைப்பட இசை, 1-30 வாத்திய இசை, 1-50 குரலிசை, 2-10 கிளாரினெட்—என். வீராசாமி, 2-50 ஜெய பேரிகை.

மாலை 5-15 துதிப்பாடல்கள், 5-45 ஆகாஷ்வாணி ஒலிப் பதிவுகள்.

இரவு 6-05 பிராந்தியச் செய்திகள், 6-15 செய்திக் குறிப்புகள், 6-20 கிராம நிகழ்ச்சிகள், 7-30 பேச்சு—என். வி. ரிச்சார்ட் 'நூல் மதிப்புரை', 7-45 பாட்டு—கோபாலன் நாயர், 8-45 குரலிசை, 10-00 இசை நாடகம்—சிவ கௌரி.

## மந்திரியின் அறிவித்தல்

கொழும்பு, புதன்

குறைபாடுகளைத் தெரிவிக்கும் நோக்கத்துடன் எந்த ஒரு அரசாங்க ஊழியராவது நேரடியாகவோ அல்லது வேறு விதமாகவோ தம்முடன் தொடர்பு கொண்டால் அவர் மீது எவ்வித ஒழுங்கு நடவடிக்கையும் எடுக்கப்படக் கூடாதென உணவு, விவசாய, மீன்பிடி மந்திரி திரு. பீலிக்ஸ் ஆர். டயஸ் பண்டாரநாயகா தமது அமைச்சின் கீழுள்ள சகல இலாகா தலைவர்களுக்கும் கார்ப்பரேஷன் தலைவர்களுக்கும் அறிவித்தல் செய்துள்ளார்.

## 30 பேர் பலி

அங்காரா, அக். 7

மேற்கு துருக்கியில் ஏற்பட்ட ஒரு பூகம்பத்தின் விளைவாக குறைந்தது 30 பேர் மாண்டதாயும் ஒரு கிராமம் தரை மட்டமாகியதாயும் அறிவிக்கப்படுகிறது.

## சமஸ்கிருதப் பரீட்சைகள்

யாழ்ப்பாணம், புதன்

பம்பாய் பாரதீய வித்யா பவன சமஸ்கிருதப் பரீட்சைகள், சமஸ்கிருத விஸ்வ பரிஷத் வட இலங்கைக் கேந்திரத்தினால் சென்ற சனி, ஞாயிற்றுக்கிழமைகளில் யாழ்ப்பாணம் நாவலர் வித்தியாசாலையில் நடாத்தப்பட்டது. பால போத, பிராரம்ப, பிரவேச, கோவித என்னும் நான்கு பரீட்சைகளுக்கும் நாற்பது பரீட்சார்த்திகள் தோற்றினர்.

பரீட்சைக் கட்டணப் பணம் அனுப்பச் செலாவணி அனுமதி கிடையாததை அறிந்த பாரதீய வித்தியாபவன நிர்வாகிகள் தாமே நேரடியாகச் செலாவணி இலாகாவுக்கு வேண்டுகோள் அனுப்பிவிட்டு, இம்முறைப் பரீட்சை தடையின்றி நடக்க அனுமதித்தனர் என அறிவிக்கப்பட்டுள்ளது. பாரதீய வித்தியாபவனம் இப் பரீட்சைகளை நடத்துவது உண்மைதான் என்று இந்திய ஹைகமிஷன் உறுதிப்படுத்த வேண்டுமென்று முதலில் செலாவணி இலாகா கேட்டதாகவும் இந்த உறுதிப்பத்திரம் கிடைத்ததும், இப் பரீட்சைகளால் இலங்கையில் கல்வி முன்னேற்றமடையுமென்று வித்தியாதிபதி அங்கீகாரமளிக்கவேண்டுமென்று கூறியதாகவும் இப்போது இதற்கான வித்தியாதிபதியின் அங்கீகாரம் பெறப்பட்டு விட்டதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

## போதுமான உணவு இருப்பில் இருக்கிறது

கொழும்பு, புதன்

மூன்று மாதத்துக்குத் தேவையான அரிசி, சீனி, மாவு ஆகிய அத்தியாவசியமான உணவுப் பொருள்கள் போதிய அளவு இருப்பில் இருப்பதாக உணவு இலாகா அறிவித்துள்ளது. இதுபோன்று ஒரு போதும் இருப்பில் இருந்திருக்கவில்லையெனவும் இலாகா தெரிவித்துள்ளது.

வெளியூர்களிலிருந்து உணவுப் பொருள்களை ஏற்றி வந்துள்ள கப்பல்கள் இப்போது துறைமுகத்தில் அவற்றை இறக்குமதி செய்துகொண்டிருப்பதாகவும் இலாகா அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

## கி. ச. தலைவருக்கு வரவேற்பு

மாவிட்டபுரம், புதன்

கைதடி-நாவற்குழி கிராம சபைக்குப் புதிதாகத் தெரிவு செய்யப்பட்ட கிராமசபைத் தலைவர் திரு. க. தம்பிப்பிள்ளைக்கு கைதடி மக்களால் ஒரு பொதுவரவேற்பு அளிக்கப்பட்டது. கைதடி வடக்கு குருசாமி வித்தியாசாலையில் டாக்டர் சே. சின்னத்தம்பி தலைமையில் நடைபெற்ற இந்த வரவேற்புக் கூட்டத்தில் சாவகச்சேரி எம். பி. திரு. வி. என். நவரத்தினம், உடுவில் எம். பி. திரு. வி. தர்மலிங்கம் ஆகியோருட்படப் பலர் உரைநிகழ்த்தினர்.

## மக்கள் முன்னேற்ற மன்ற முயற்சி

யாழ்ப்பாணம், புதன்

மாவிட்டபுரம், செல்வச்சந்நிதி போன்ற பெரிய ஆலயங்களை சகல மக்களுக்கும் திறந்துவிடுவதற்குத் தீவிர முயற்சிசெய்வதற்கு கொழும்பிலுள்ள பல தமிழ்ப்பிரமுகர்கள் ஆதரவளித்துள்ளதாகவும் மக்கள் முன்னேற்ற மன்றத் தூதுகோஷ்டியொன்று நீதியரசர் திரு. ஸ்ரீஸ்கந்தராசா, திரு. மு. சிவசிதம்பரம் மற்றும் பிரமுகர்களையும் கொழும்பில் சந்தித்துப் பேசியதாகவும் மன்றச் செயலாளர் தெரிவித்தார்.

## பத்திரிகை மசோதாவுக்கு எதிர்ப்பு

பதுளை, புதன்

'காலம் சென்ற பிரதமர் திரு. பண்டாரநாயகாவுக்கு சுதந்திரக் கட்சியை உருவாக்க உதவியவர்கள் பௌத்த பிக்குகளே. இப்போதுள்ள அரசாங்கத்தை அமைக்கவும் உதவியவர்கள் பிக்குகளே. இவ்விதம் உதவும்போது பொதுமக்களின் ஜனநாயகதந்திரத்தைத் தகர்த்தெறியக் கூடியதான பத்திரிகை மசோதாவைக் கொண்டுவருவதற்கான அங்கீகாரத்தை பிக்குகள் அரசாங்கத்துக்குக் கொடுக்கவில்லை.

இவ்வாறு பத்திரிகை மசோதாவை எதிர்க்குமுகமாக விதுருபொல பியதிஸ்ஸபிரிவெனவில் நடைபெற்ற கூட்டத்தில் பேசிய விதுருபொல தர்மானந்த தேரோ குறிப்பிட்டார்.

## ராதாகிருஷ்ணன்

புதுடில்லி, அக். 7

ரஷ்யமக்கள் இந்தியாமீது காட்டும் நட்புணர்ச்சி தம்மைப் பெரிதும் கவர்ந்தது என ஜனாதிபதி ராதாகிருஷ்ணன் "டாஸ்" செய்தி ஸ்தாபன நிருபருக்கு அளித்த பேட்டியில் கூறினார்.

## சாஸ்திரி

செய்ரோ, அக். 7

இந்தியப் பிரதமர் திரு. லால்பகதூர் சாஸ்திரி நேற்று லாவோஸ பிரதமர் இளவரசர் சுவர்ணபூமாவைச் சந்தித்துப் பேசினார். பின்னர் ஆப்கானிஸ்தான் பிரதமரையும் அவர் சந்தித்தார்.

## ஆர்ஜன்டீனாவில் ஆர்ப்பாட்டம்

புவனஸ்அயர்ஸ், அக். 7

ஆர்ஜன்டீனாவில் சுற்றுப் பிரயாணம் செய்யும் பிரெஞ்சு அதிபர் டிகால் அந்த நாட்டு ஜனாதிபதியுடன் சுற்றுப்பிரயாணம் செய்தபோது முன்னாள் ஜனாதிபதி பெரோனின் ஆதரவாளர்கள் பலாத்கார ஆர்ப்பாட்டம் செய்தனர். ஆர்ப்பாட்டக்காரர்கள், இரு தலைவர்களும் சென்ற காரைச் சூழ்ந்து கொண்டனர். காரின் மீது கற்கள் வீசப்பட்டு, அதன் கண்ணாடி உடைந்ததால் ஆர்ஜன்டீனா ஜனாதிபதியின் கையில் வெட்டுக்காயம் ஏற்பட்டது. பொலிசார் துப்பாக்கிப் பிரயோகம் செய்ததில் 20பேர் காயமடைந்தனர். 80 பேர் கைதுசெய்யப்பட்டனர்.

## "சொந்த மக்களையே நம்பவில்லை"

—மிஸ் ஜின்னு

கராச்சி, அக். 7

பாகிஸ்தான் மக்களுக்கு ஜனநாயக உரிமை அளிக்காததின்மூலம், அந்த மக்கள் தங்கள் சொந்த நாட்டிலேயே சந்தேகிக்கப்படுகிறார்கள் என்றும், ஆட்சியாளருக்கும் மக்களுக்குமிடையேயுள்ள பிளவு இதுதான் என்றும் ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடவிருக்கும் மிஸ் பாத்திமா ஜின்னு கூறினார்.

"ஒவ்வொருநாளும் புதிய கட்டுப்பாடுகள் வந்துகொண்டிருக்கின்றன. மக்கள் தினசரி தவித்துக் கொண்டிருக்கிறார்கள்" என்றும் அவர் கூறினார்.

## பாதுகாப்புசாதன உற்பத்தி அதிகரிப்பு

புதுடில்லி, அக். 7

இந்தியாமீது சீன தாக்குதல் நடத்தியபின் நாட்டின் பாதுகாப்புசாதன உற்பத்தி வெகுவாக அதிகரித்திருக்கிறதென்றும், சென்ற ஆண்டு 120 கோடி ரூபாய்க்குமேல் பெறுமதியான சாதனங்கள் உற்பத்தி செய்யப்பட்டன என்றும், இது அதற்கு முந்திய ஆண்டைக்காட்டிலும் மும்மடங்கு அதிகம் என்றும் அறிவிக்கப்பட்டது.

## தமிழ் விழா

சுழிபுரம், புதன்

வலிகாமம் மேற்கு உள்ளூராட்சி மன்றங்களின் சார்பில் மானிப்பாய் இந்துக்கல்லூரியில் இம்மாதம் 10-ம், 11-ம் திகதிகளில் சாகித்திய தின தமிழ் விழா மிகவும் சிறப்பான முறையில் நடைபெறவிருக்கிறது.

10-ம் திகதி சனிக்கிழமை பிற்பகல் 3-45 க்கு உயர்நீதி மன்ற நீதியரசர் டாக்டர் எச். டபிள்யு. தம்பையா விழாவை ஆரம்பித்து வைப்பார். அன்றைய விழாவுக்கு வட்டுக்கோட்டை கிராமசபைத் தலைவர் முதலியார் சி. சின்னத்தம்பி தலைமை தாங்குவார்.

இரண்டாவது நாள் நிகழ்ச்சியில் பட்டிமன்றம் திரு. பொன். முத்துக்குமாரன் தலைமையில் நடைபெறும். வட்டுக்கோட்டை எம். பி. திரு. அ. அமிர்தலிங்கத்தின் சுவாமி ஞானப்பிரகாசர் பற்றிய சொற்பொழிவும் இடம்பெறும்.

---

## நாவலர் இல்லம் வெற்றி

யாழ்ப்பாணம், புதன்

தாவடி ஸ்ரீ கணேசவிளையாட்டுக்கழகத்தின் 5-வது வருடாந்த விளையாட்டுப்போட்டி அண்மையில் கன்ஞகம் உதவிப் பொலிஸ் அதிபர் திரு. தியாகராசாவின் கொடியேற்று வைபவத்துடன் ஆரம்பமாகியது. வழக்கறிஞர் திரு. மதியாபரணம் தலைமையில் பரிசளிப்பு விழா நடைபெற்றது. உடுவில் கிராமசபைத் தலைவர் திரு. ச. முத்துலிங்கம் வெற்றிபெற்றோருக்கு பரிசில்களை வழங்கினார்.

பின்வருவோர் சாம்பியன்களாகத் தெரிவுசெய்யப்பட்டனர். மேற்பிரிவு:- எம். சிவகுமாரன்; மத்தியபிரிவு: என். மாணிக்கவாசகர்; கீழ்ப்பிரிவு: பி. சந்திரநாதன்; பாலர்பிரிவு: ஜி. இராமகிருஷ்ணன்.

114 புள்ளிகளைப் பெற்று நாவலர் இல்லம் முதலாவது இடத்தைப்பெற்றது. சோமர் இல்லம் இரண்டாவது இடத்தையும், பரமு இல்லம் மூன்றாவது இடத்தையும் பெற்றன.

---

## கோவில் புனருத்தாரணம் சிறந்த தர்மம்

யாழ்ப்பாணம், புதன்

"புதிதாக ஓர் ஆலயத்தை அமைப்பதிலும் பார்க்க புராதன கோயில்களைப் புதுக்குவதே தர்மங்கள் யாவற்றிலும் சிறந்தது. இக்கோயிலில் திருப்பணி வேலைகள் மிகத்துரிதமாக நடைபெறுவதையிட்டு நான் மிகவும் மகிழ்ச்சியடைகின்றேன். மூலஸ்தானம் பூர்த்தியாகி கும்பாபிஷேகம் நடைபெற்றமை அதியுயர்ந்த மணிக்கோபுரம் ஒன்றமைத்தமை, உட்பிரகாரத்தையும் நல்ல முறையில் அதிக செலவில் அமைத்தமை, நல்லமுறையில் உருவாகும் தேர்த் திருப்பணியொன்றைத் தொடங்கியமை என்றின்னோரன்ன தொண்டுகளைக் காணுந்தோறும் இங்கு சைவம் எம்முறையில் வளர்க்கப்படுகின்றது என்பதை உணரமுடிகிறது. சிரமதான முறையில் அஸ்திவாரம்தோண்டும்போது முன்னணியில் நானும் உங்களுடன் சேர்ந்து காது கலந்துகொள்வேன்" என்று இணுவில் ஸ்ரீ பரராசசேகரப்பிள்ளையார் கோயிலின் உட்பிரகாரத் திருப்பணிப் பூர்த்திவிழாவின்போது தலைமை தாங்கிய வலிகாமம் வடக்கு காரியாதிகாரி திரு. த. முருகேசம்பிள்ளை தமது தலைமையுரையிற் குறிப்பிட்டார்.

திரு. மு. வர்ணகுலசிங்கம் பக்கவாத்திய சகிதமாக "பட்டினத்தார்" என்னும் பொருள் பற்றி கதாப்பிரசங்கம் நிகழ்த்தினார்.

---

## பிரிட்டிஷ் மகாராணி

ஒட்டாவா, அக். 7

பிரிட்டிஷ் மகாராணி எலிஸபெத் கனடாவில் தனது முதல் நிகழ்ச்சியில் பேசியபோது கனடாவின் நவீன ஸ்தாபகர்களைப் புகழ்ந்துரைத்தார்.

## உதயதாரகை வெற்றியீட்டியது

குரும்பசிட்டி, புதன்

குரும்பசிட்டி உதயதாரகை மன்றக் கோஷ்டிக்கும் குரும்பசிட்டி இளைஞர் கழகக் கோஷ்டிக்குமிடையில் சென்ற ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற உதைபந்தாட்டப் போட்டியில் உதயதாரகை இளைஞர் மன்றக் கோஷ்டி 6-0 கோல்களால் வெற்றியீட்டியது. இப்போட்டிக்கு சு. சிவகுமாரன் மத்தியஸ்தம் வகித்தார்.

---

## லில்லி இல்லத்துக்கு முதலிடம்

யாழ்ப்பாணம், புதன்

அச்சுவேலி புனித தெரேசா பாடசாலை வருடாந்த விளையாட்டுப்போட்டி சென்ற சனிக்கிழமை நடைபெற்றது. விளையாட்டுப்போட்டிக்கு வித்தியாதிகாரி திருமதி ஆர். எஸ். பாமர் தலைமை வகித்தார். தெரேசா பாடசாலை கல்வியில் மட்டுமல்லாது மற்றும் விளையாட்டு, கலை ஆகியசகலதுறைகளிலும் முன்னணி வகிப்பது பெருமைக்குரியதென திருமதி பாமர் தமது தலைமையுரையில் குறிப்பிட்டார். விளையாட்டுக்களில் லில்லி இல்லம் 186 புள்ளிகள்பெற்று முதல்ஸ்தானத்தைக் கைப்பற்றிக்கொண்டது

---

திருமலை

## நகரப் பாடசாலைகள் உ. ப. போட்டி

திருக்கோணமலை, புதன்

திருக்கோணமலை நகரப்பகுதிப் பாடசாலைகளுக்கான உதை பந்தாட்டப் போட்டி ஆரம்பித்துள்ளது. போட்டியில் அர்ச். சூசையப்பர் கல்லூரி, இந்துக் கல்லூரி, சூசையப்பர் தமிழ்ப்பாடசாலை, பெருந்தெரு மெதடிஸ்த பாடசாலை, சிங்கள மகா வித்தியாலயம் ஆகிய பாடசாலைகள் பங்குபற்றுகின்றன.

இதுவரை நடைபெற்ற போட்டிகளுள் அர்ச். சூசையப்பர் கல்லூரியும், மகாவித்தியாலயமும் முன்னணி வகிக்கின்றன. பெருந்தெருப் பாடசாலைக்கும், மகாவித்தியாலயத்துக்குமிடையில் நடைபெறவிருக்கும் உதைபந்தாட்டப் போட்டி சுறுசுறுப்பான ஆட்டமாக இருக்குமென பலரும் ஆர்வத்துடன் எதிர்பார்த்துக்கொண்டிருப்பது குறிப்பிடத்தக்கது. மேற்படி போட்டிகளில் 19, 17, 15 வயதுக்குட்பட்ட பிரிவுகள் இடம் பெற்றிருக்கின்றன.

---

## "பொருளாதார ரீதியில் சிந்திக்க வேண்டும்"

உடுப்பிட்டி, புதன்

"தொண்டமானாறு நன்னீர்த் திட்டத்தில் 40 சத வீதமே உப்பு நீரை நன்னீராக்கமுடிகிறது. அரசாங்கம் இன்னும் கூடிய முயற்சி எடுத்தால் நூறு வீதமும் நன்னீராக்கமுடியும். மேல் நாடுகளில் கடல் நீரையே நன்னீராக்கும் திட்டம் வைத்திருக்கிறார்களென்றால் தொண்டமானாற்றுத் திட்டம் மிக மிக எளிதானதே. கரவெட்டியைச்சேர்ந்த அத்துளுவிலும் இந்நன்னீர்த் திட்டம் கொண்டுவரவேண்டும். ஏராளமான உப்பு விளைந்த கப்புதூ என்னுமிடத்தில் இப்போது உப்பு விளைச்சல் கவனிப்பாரற்றுக்கிடக்கிறது. முயற்சித்தால் இங்கும் ஆனையிறவு போன்று கூடுதலான உப்பு விளைவிக்கமுடியும். பொருளாதார ரீதியில் சிந்திப்பதை விடுத்து அரசாங்க உத்தியோகந்தான் வேண்டும் என்று சிந்திப்பவர்கள் என்றுமே முன்னேறமாட்டார்கள்."

இவ்வாறு நெல்லியடி அரசினர் மத்திய மகா வித்தியாலய புவியியல் மன்றக்கூட்டத்தில் பிரதம பேச்சாளராகக் கலந்துகொண்ட தெட்சணாநாகேந்திரன் பேசுகையில் கூறினார். கூட்டத்துக்கு திரு. ஜெகநாதன் தலைமைவகித்தார்.

# அரசாங்க காரியாலயங்களில் சரஸ்வதி பூசை

கொழும்பு, வியாழன்

செட்டியார் தெரு முத்துவிநாயகர் ஆலய மண்டபத்தில் உபதலைவர் திரு. சோ. முத்து தலைமையில் நடைபெற்ற கொழும்பு இந்து வாலிபர் சங்க நிர்வாகசபைக் கூட்டத்தில் சைவப்பெருமக்களின் முக்கிய வைபவங்களில் ஒன்றான நவராத்திரி பூஜையை இவ்வருடம் தொடக்கம் அரசாங்கக் காரியாலயங்களிலும் கொண்டாடுவதற்கான முயற்சியைச் சங்கம் மேற்கொள்வதென்றும் சைவர்கள் உள்ள காரியாலயங்களில் சரஸ்வதி பூஜையைச் சிறப்பாகக்கொண்டாடுவதற்கு முயற்சியெடுக்குமாறு கேட்டுக்கொள்வதென்றும் தீர்மானிக்கப்பட்டது.

அரசாங்க இந்துமத ஊழியர்கள் முதல்தடவையாக இம்முறை சரஸ்வதி பூஜையை மிகவும் சிறப்பாகக் கொண்டாடுவதெனத் தீர்மானித்துள்ளார்கள். அடுத்த திங்களன்று மாலை 5 மணியளவில் கொழும்பில் திறைசேரிக் கட்டிடத்தில் சரஸ்வதி பூஜையைக் கொண்டாடவிருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

## நவராத்திரி விழா

யாழ்ப்பாணம், வியாழன்

யாழ்ப்பாணம் வர்த்தக கணக்கியல் கல்லூரி மாணவ மன்றத்தினர் இரண்டாவதாண்டுமுறையாக நவராத்திரி விழாவைச் சிறப்பாகக் கொண்டாடுகிறார்கள். வியாழக்கிழமை நடைபெறவிருக்கும் சரஸ்வதி பூசையன்று விசேஷ பூசை, பிரார்த்தனை, சொற்பொழிவுகள், இன்னிசைக்கச்சேரி ஆகியன நடைபெறும்.

❖ ❖ ❖

யாழ்ப்பாணம் திவ்ய ஜீவன சங்கம் நவராத்திரி விழாவை நேற்று முதல் கொண்டாடுகிறது. விழா தொடர்ந்து 15-ம் தேதிவரை நடைபெறும். விழாவின் கடைசி நாளான விஜய தசமியன்று அத்தியடிப்பிள்ளையார் கோவிலில் விசேடபூசை, பிரார்த்தனை, சொற்பொழிவுகள் இடம்பெறும்.

❖ ❖ ❖

மாதகல் மேற்கு சனசமூக நிலையத்தினர், சுழிபுரம் கலைமகள் சனசமூக நிலையத்தினர், பண்ணாகம் தெற்கு ஸ்ரீமுருகன் சனசமூக நிலயத்தினர் இம்முறை நவராத்திரி விழாவை சிறப்பாகக் கொண்டாட ஒழுங்குகள் மேற்கொண்டுள்ளனர்.

---

## பெற்றோர்தின விழா

திருக்கோணமலை, புதன்

திருக்கோணமலை இராமகிருஷ்ணமிஷன் கோணேஸ்வர வித்தியாலயப் பெற்றோர் தின விழா அண்மையில் நடைபெற்றது. இவ்விழாவிற்குத் திருக்கோணமலைப் பகுதி வித்தியாதிகாரி திரு. வி. சங்கரலிங்கம் தலைமைதாங்கினார். விழாவில் திருக்கோணமலைப் பாராளுமன்ற உறுப்பினர் திரு. எஸ். எம். மாணிக்கராசா, நகராண்மைக் கழகத் தலைவர் டாக்டர் சிவானந்தம், மாவட்ட வித்தியாதரிசி திரு. ஜே. எஸ். அருமைநாயகம் ஆகியோர் சொற்பொழிவாற்றினார்கள். விழாவில் மாணவர்களின் கலைநிகழ்ச்சிகளும், "புத்தி வந்தது" என்னும் நாடகமும் இடம்பெற்றன.

---

## உருளைக்கிழங்கு தட்டுப்பாடு

கொழும்பு, புதன்

உருளைக்கிழங்குக்கு இப்போது பெருத்த தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. மிகச்சில வர்த்தகர்களிடமே உருளைக் கிழங்கு இருப்பிலிருப்பதாகவும் றாத்தல் ஒன்று 50 சத வீதமாக விற்கப்படுவதாகவும் அறியப்படுகிறது.

---

மாணவ மாணவிகளின் புவியியல் சம்பந்தமான கருத்தரங்குகளும் நடைபெற்றன.

## நிர்வாகக் காரியதரிசி தேவை

யாழ்ப்பாணம் சௌக்கிய சேவை கூட்டுறவுச் சிக்கனக் கடன் நிவிர்த்திச் சங்கத்திற்கு ஓர் நிர்வாகக் காரியதரிசி தேவை. மனுக்கள் 15-10-64 நண்பகல் 12 மணிக்கு முன்பதாக எனது கைக்குக் கிட்டப் பதிவுத் தபாலில் இடப்பக்க தபால் உறையின் மேற்பாகத்தே நிர்வாகக் காரியதரிசிக்கான மனு என எழுதியனுப்பப்படல் வேண்டும்.

வயது: 20 தொடக்கம் 35க்கு உட்பட்டவர்களாகவும்,

தகமை: சிரேஷ்ட தராதரப் பத்திரத்தை யுடையவர்களாகவும் தமிழ், ஆங்கிலம் தட்டச்சுப் பொறியியலில் அனுபவமும் தராதரமும் உடையவர்களாகவும் கணக்கு வைத்தல் முக்கிய அம்சமாகக் கொண்டவராகவும் இருத்தல்வேண்டும்.

பரீட்சார்த்த காலம்: தேர்ந்தெடுக்கப்பட்ட பரீட்சார்த்தி ஒரு வருட காலத்திற்குப் பரீட்சார்த்த நியமனமாக இருக்கும். இக்கால எல்லையும் நடத்தை, வேலைத்திறன், அவரது நிரந்தர சேவையை அங்கீகரிக்கும்முக்கிய அம்சமாகும்.

சம்பளம்: பரீட்சார்த்த காலமான ஒரு வருடத்திற்கும் ரூபா 75-00மொத்தச்சம்பளமாகவும் பரீட்சார்த்த காலத்தின் பின் மாதம் ரூபா $\frac{100 — 200}{10 — 10}$ சம்பளமாகவும் கொடுக்கப்படும்.

பிணை: பரீட்சார்த்த காலத்திற்கு ரூபா 500-00 காசுப்பிணையாகவும் ரூபா 2000-00 ஆதனப்பிணையாகவும் இருக்கும். பரீட்சார்த்த காலத்தின்பின் கூட்டுறவு ஆணையாளரால் கோரப்படும் பிணைப்பணத்திற்குக் கட்டுப்படுவார்.

அத்துடன் சுகாதார இலாகாவிலோ, கூட்டுறவு இலாகாவிலோ உத்தியோகம் வகிக்கும் ஒருவரின் நேரடிச் சிபார்சு கண்டிப்பாகக் கொண்டதாக இருக்கவேண்டும். கூட்டுறவு பாடசாலைத் தராதரப்பத்திரம் கொண்டவர்களுக்கு விசேஷ சலுகை.

முக்கிய கவனத்திற்கு:

இப்பதவி பெறும் நோக்கமாக நேராகவோ மறைமுகமாகவோ ஆதரவு தேடும் எவரும் இப்பதவிக்கு தகுதியற்றவர்கள் என்ற கோதாவில் மனுக்கள் நிராகரிக்கப்படும்.

இ. செல்லத்துரை,
கௌரவ காரியதரிசி.

தபால் பெட்டி: 58
யா. சௌ. சி. சே.
க. நி. சங்கம். 980

---

## உளவு குற்றத்துக்கு யு. எஸ். மறுப்பு

வாஷிங்டன், அக். 7

3 அமெரிக்கர்களும், 1 பிரிட்டிஷாரும் ரஷ்யாவில் உளவறிந்ததாக ரஷ்யா கூறிய குற்றச்சாட்டை அமெரிக்கா நிராகரித்திருக்கிறது. பிரிட்டிஷ் வெளிவிவகார இலாகாவும் இதை மறுத்தது. இந்த நால்வரும் 900 புகைப்படங்கள் எடுத்தார்கள்என்றும், 26 புத்தகங்கள் நிறைய குறிப்புக்கள் எழுதியிருந்ததாயும் ரஷ்யா குற்றஞ்சாட்டியிருக்கிறது.

---

## ஆங்கிலிகன் திருச்சபை

கேப்டவுன், அக். 7

தென்னாபிரிக்கா ஆங்கிலிகன் திருச்சபைத் தலைவர்கள் திருச்சபை விஷயத்தில் நிறப்பாகுபாட்டுக்கு முடிவுகட்டுவதெனத் தீர்மானித்திருக்கிறார்கள்.


### வரி விளம்பரம்

அனுபவம் வாய்ந்த சீன நிபுணரால் இயற்கை அமைப்புக்கேற்ப பற்களைக் கட்டுவதற்கு உகந்த இடம் யாழ்ப்பாணத்தில் இது ஒன்றே. கண் பார்வை பரிசோதனை செய்தும், டாக்டரினால் சிபார்சு செய்த கண்ணாடிகள் அழகிய பிரேம்களில் சகாயமான விலையில் பெற்றுக்கொள்ளலாம். எஸ். எம். பெர்னாண்டோ, பிரதானவீதி, முதலாம் குறுக்குத் தெரு சந்தி, யாழ்ப்பாணம். 895

---

**தேவை**

புடவை வியாபாரத்தில் அனுபவமிக்க (18—25 வயது) இரண்டு விற்பனையாளர்கள் தேவை. உடன் கடிதமூலம் விண்ணப்பிக்கவும். அஜந்தாஸ், 27, மின்சார நிலையவீதி, யாழ்ப்பாணம். 1012

---

**விற்பனைக்கு**

சிறந்த முறையில் பாவிக்கப்பெற்ற 33 Sri 4384 — 15அந்தர் கொமர் வான் யாழ்ப்பாணம் மலையாளம் புகையிலை ஐக்கிய வியாபாரச் சங்கத்தில் விற்பனவுக்கிருக்கின்றது. கந்தோர் நேரங்களில் பார்வையிடலாம். 1013

---

**தொய்வு, நீரிழிவு**

குணப்படுத்த உத்தரவாதம் மந்திரிமார், அரசியற் பிரமுகர்கள் எம்மிடம் சிகிச்சை பெற்ற விபரங்கள் அடங்கிய கற்றலோக் இனம். தொய்வுக்கு 10 நாள் மருந்து 12/50 நீரிழிவுக்கு 10 நாள் மருந்து 10/50, வைத்தியர் பரிபூரணாநந்தர் கைலாயபிள்ளையார் கோவிலடி, யாழ்ப்பாணம்.


---

## பாடசாலைகளில் புதிய கட்டடங்கள்

பருத்தித்துறை புதன்

வடமராட்சி இந்து மகளிர் கல்லூரியின் விஸ்தரிப்பின்பேரில் சுமார் 22 ஆயிரம் ரூபா செலவில் மேற்கொள்ளப்பட்ட கட்டட வேலைகள் பூர்த்தியடைந்துவிட்டன. புலோலி மெதடிஸ்ட் பாடசாலை, வராத்துப்பளை இந்து தமிழ்க்கலவன் பாடசாலை, தும்பளை சிவப்பிரகாசவித்தியாசாலை ஆகியவற்றிலும் முறையே 6400, 8000, 9000 ரூபா செலவில் ஆரம்பிக்கப்பட்ட வேலைகளும் முடிவடைந்துவிட்டதாகத் தெரிய வருகிறது.

---

## ஆடு திருடியவர்மீது வழக்கு தாக்கல்

பருத்தித்துறை, புதன்

துன்னாலையைச் சேர்ந்த சந்திரசேகரம் என்பவருக்குச் சொந்தமான 40 ரூபா பெறுமதியுடைய ஆடொன்றைத்திருடியதாக சந்தேகத்தின் பேரில் அதே இடத்தைச் சேர்ந்த கணபதிஐயர் என்பவரைப் பருத்தித்துறைப் பொலிஸார் கைதுசெய்தனர்.

பருத்தித்துறை நீதிபதி திரு. ஜெபேட்சில்வா அவர்கள் எதிரியை 100 ரூபா பிணையில் செல்ல அனுமதித்து இம்மாதம் 16-ம் திகதி கோர்ட்டில் ஆஜராகும்படி உத்தரவு பிறப்பித்தார்.

---

## போயா தினங்களை விடுமுறையாக்க கோரிக்கை

கொழும்பு, புதன்

அரசாங்க, ஸ்தலஸ்தாபன சேவையில் கடமையாற்றும் பௌத்த சங்கங்களைச் சேர்ந்த தூது கோஷ்டியொன்று திரு. என். கியு. டயஸ் தலைமையில் நிதிமந்திரி டாக்டர் என். எம். பெரேராவைச் சந்தித்து சகல போயா தினங்களையும் அரசாங்க விடுமுறைகளாகப் பிரகடனப்படுத்தும்படி கோரவிருக்கிறார்கள். இவர்கள் நிதிமந்திரியை வெள்ளிக்கிழமை சந்திப்பார்களென அறியப்படுகிறது.

## சேர். கந்தையா ஆசியுரை

கல்வி அமைச்சின் நிரந்தரக் காரியதரிசி திரு. எம். ஜே. பெரேராவினதும் திருமதி பெரேராவினதும் தலைமையில் நடைபெறும் இவ்வரங்கேற்றத்துக்கு திருக்கேதீச்சர ஆலயத் திருப்பணிச்சபைத்தலைவர் சேர். கந்தையா வைத்தியநாதன் வழங்கியுள்ள ஆசிச்செய்தியில் பின்வருமாறு குறிப்பிட்டுள்ளார்.

செல்வி சிவநாயகி சிவகுரு சங்கீதத்தில் தமது ஆரம்பக் கல்வியை இலங்கையின் வானொலிக் கலைஞர் சீதாராம் அவர்களிடம் பெற்று பின் அண்ணாமலைப் பல்கலைக்கழகத்திற்கு உயர் கல்வியின் பொருட்டுச் சென்று வீணையில் விசேஷ பயிற்சி பெற்றார். அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் சங்கீதத்துறையில்நான்கு வருடம் பயின்று சிறப்பு வகுப்பில் சங்கீதபூஷணப் பட்டம் பெற்றார்.

செல்வி சிவநாயகி தமது கலையைக் கௌரியம்மாள் சமேத திருக்கேதீச்சரநாதருக்கு அர்ப்பணித்துக்கொண்டு இந்த அரங்கேற்றத்தில்முதன் முதலாக இலங்கை மக்கள் முன் தோன்றுகிறார். வாழ்க்கையில் இவர் தேர்ந்தெடுத்துக் கொண்டுள்ள கலையில் இவருக்கு சித்தி கிடைப்பதாக என்று வாழ்த்துகிறோம். எங்கள் மாணவர்கள் சங்கீதத்தில் உயர்கல்வி பெறுவதற் பொருட்டு இந்தியாவுக்குச் செல்லவியலாமல் இருக்கும் இந்தநேரத்தில் வருங்காலச் சந்ததியாருக்குச் சங்கீதம் கற்கும் வாய்ப்பு எங்கள் நாட்டிலேயே இருக்கின்றதென்பதை உறுதிப்படுத்திக் கொண்டு செல்வி சிவநாயகியைப் போன்ற ஒரு திறமையுள்ள பெண் எங்கள் மத்தியில் வந்துள்ளமை ஒரு பெரும் சந்தோஷமான அறிகுறியாகும்.



அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் சங்கீத பூஷணம் பட்டம்பெற்ற குமாரி சிவநாயகி சிவகுருவின் வீணைக்கச்சேரி இம்மாதம் 10-ம் திகதி சனிக்கிழமை மாலை பம்பலப்பிட்டி சரஸ்வதி மண்டபத்தில் திருக்கேதீசர ஆலய திருப்பணி நிதிக்காக நடைபெறுகிறது.

## ஒழுங்கு பிரச்னை. . .

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

சாங்கம் கொண்டுவந்த தீர்மானத்தை எதிர்கட்சியினர் இன்று பலமாக எதிர்த்துப் பேசினர்.

கிரிதாரை ஆலை சம்பந்தப்பட்ட விவகாரங்களுக்கும் லஞ்ச ஊழல் நிறைந்த அங்கத்தவர்களுக்கும் இந்த அரசாங்கம் பாதுகாப்பளிக்கப் பார்க்கின்றதுஎன்றுகோட்டை எம். பி திரு. ரூபேர்ட் குணவர்த்தன கூறினார்.

திரு. ரூபர்ட் குணவர்த்தன தீர்மானத்தைப் பற்றி பேசவில்லை. அரசாங்கத்திற்கு எதிராக பேசி-அதன் மதிப்பை குறைக்க பார்க்கிறார். ஆகையால் அவரை பேச அனுமதிக்கவேண்டாம்" என்று டாக்டர் கொல்வின் ஆர். டி. சில்வா கூறினர்.

"ஒரு கட்சியைச் சேர்ந்த அங்கத்தவர்கள் தான் லஞ்ச ஊழல்களுக்குள் இருக்கின்றார்கள். இதையே நான் முன்னரும் குறிப்பிட்டிருந்தேன். நாட்டில் பாராளுமன்றத்தில் அனுபவம் வாய்ந்த பண்டிதர்கள் என்று கூறும் டாக்டர்களுக்கு இங்கு பேச இடம் கொடுக்கமாட்டேன்" என்றும் திரு. ரூபேர்ட் குணவர்த்தன தெரிவித்தார்.

திரு. ரூபேர்ட் குணவர்த்தன மிகவும் பாரதூரமான குற்றங்களை இந்தச் சபையின் அங்கத்தவர்களுக்கு எதிராக சாட்டியுள்ளார் என்று டாக்டர் கொல்வின் ஆர். டி. சில்வா உரத்த குரலில் தனது ஆட்சேபனையை தெரிவித்தார்.

திரு. ரூபர்ட் குணவர்த்தன லஞ்சம் கொடுப்பதுடன் லஞ்சம் வாங்குவதுமுண்டு. இதை நான் நிரூபிக்க முடியும் என்றும் டாக்டர் கொல்வின் ஆர். டி' சில்வா தெரிவித்தார்.

இரு தரப்பினரிடமிருந்தும் கண்டனங்கள் கிளம்பி, அங்கத்தவர்கள் சொல்மாரி பொழியவே; திரு.ரூபர்ட் ஆவேஷத்துடன் பேசினர். கிரிதரை ஆலைவிவகாரம் சம்பந்தமான சகலதையும் தங்களால் வெளிகாட்ட முடியும் என்றும்அவர் கூறினர்.

'ஆலைவிவகாரம்சம்பந்தமாக எங்களிடம்சகல தஸ்தாவேஜுகளும் இருக்கின்றன. உறுதிகளும் எங்களிடம் உண்டு. யார் யார் வீடுகள் கட்டினர்கள் என்பதும், கம்பெனிகளை யார் ஸ்தாபித்தார்கள் என்பதும் எங்களுக்குத் தெரியும்" என்றும் திரு. ரூபர்ட் குணவர்த்தன கூறினர்.

பிரேரணை சம்பந்தமானவற்றை பேசாது வேறு விஷயங்கள் குறித்து திரு. ரூபர்ட் குணவர்த்தன பேசுகிறார் என்றும் அவரை நிறுத்தச் சொல்லும்படியும் டாக்டர் கொல்வின் ஆர். டி' சில்வா சபாநாயகரை கோரினர்.

திரு. ரூபர்ட்குணவர்த்தன தொடர்ந்து பேசுகையில்; அரசாங்கத்தின் லஞ்ச ஊழல் நடவடிக்கைகளை பொது மக்கள் அறிந்து கொள்ளாத வகையில் விவாதிக்க வேண்டிய நடவடிக்கைகளை அரசாங்கம் மாற்றியமைக்கிறதென்றும் அரசாங்கத்தின் நடவடிக்கைகளையெல்லாம் அம்பலப்படுத்துவோம் என்றும் கூறினர்.

டாக்டர் கொல்வின் ஆர். டி' சில்வாவும் திரு. ரூபர்ட் குணவர்த்தனவும் 20 நிமிடங்களுக்கு மேலாக ஒருவரையொருவர் கண்டித்து சொல்மாரி பொழிந்தனர். இருவரையும் கட்டுப்படுத்துவதற்காக சபாநாயகர் பலதடவைகள் குறுக்கிட்டார்.

இன்று தனியார் பிரேரணைகளுக்குரிய நாளாக விருந்தபோதிலும் அரசாங்க நிகழ்ச்சிகள் முதலிடம் பெற வேண்டுமென்ற பிரேரணை சபை முதல்வர் திரு. சி. பி. டி' சில்வாவினல் கொண்டு வரப்பட்டு நிறைவேற்றப்பட்டது. பிரேரணைக்கு 60 அங்கத்தவர்கள் சாதகமாகவும் 42 அங்கத்தவர்கள் பாதகமாகவும் வாக்களித்தனர். நாளை வியாழக்கிழமை தனியார் பிரேரணைகளுக்கு இடம் அளிக்கப்படும். மேற்கூறப்பட்ட பிரேரணைக்கு கம்யூனிஸ்ட் கட்சியினர் சாதகமாக அரசாங்கத்துடன் சேர்ந்து வாக்களித்தனர். ஐக்கிய தேசியக்கட்சி, ஜாதிக விமுக்தி பெரமுனை, எல். பி. பி. தமிழரசுக்கட்சி ஆகியவைஎதிர்த்து வாக்களித்தன.

மேற்கண்ட பிரேரணையை சபை முதல்வர் சமர்ப்பித்த பொழுது திரு. தகநாயக்கா தான் கேள்வி ஒன்று கேட்பதற்கு சபாநாயகரிடமிருந்து அனுமதி கோரினர். அப்பொழுது டாக்டர் என். எம். பெரேரா குறுக்கிட்டு இந்த பிரேரணையை விவாதிக்கவோ திருத்தவோ முடியாது என்று கூறினர். அதன்பின்னர் சபாநாயகர் பிரேரணையை சபைக்கு வாக்கெடுப்பதற்காக விட்டார்.

## நாயைச் சுட..

காங்கேசன் துறை. புதன்

கட்டாக்காலி நாய்களைச் சுடும்போது தவறுதலாக ஆஸ்பத்திரி வார்ட்டில் நோய்வாய்ப்பட்டிருந்த ஒரு பெண்ணின் முதுகில் துப்பாக்கிச்சன்னம் பாய்ந்த சம்பவம் காங்கேசன் துறை அரசினர் ஆஸ்பத்திரியில் நடைபெற்றது.

காங்கேசன் துறை பட்டின சபையால் காங்கேசன் துறை அரசினர் ஆஸ்பத்திரியைசுற்றி நிற்கும் கட்டாக்காலி நாய்களைச் சுடுவதற்காக அனுப்பப்பட்டவர், அங்குள்ள நாய்களில் ஒன்றைச் சுடும்போது தான் மேற்படி சம்பவம் இடம் பெற்றது.

முதுகில் துப்பாக்கிச்சன்னம் பாய்ந்து காயத்துக்குள்ளான கோண்டாவிலைச்சேர்ந்த பொன்னம்மா என்பவருக்குச் சிகிச்சை அளிக்கப்படுகிறது.

வடபகுதி அசைஸ் விசாரணை

# கிளிநொச்சி கொலை வழக்கில் எதிரிக்கு நான்கு வருடகடூழியம்

## கைமோசக் கொலை புரிந்ததாக எதிரி ஒப்புக் கொண்டார்

யாழ்ப்பாணம், வியாழன்

கிளிநொச்சி கொலைவழக்கு நேற்றுக்காலை வடபகுதி அசைஸ் நீதிமன்றத்தில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டபோது, எதிரிதான் கைமோசக் கொலைக் குற்றத்திற்கு "குற்றவாளி" எனக் கூறியதும், நீதியரசர் நான்கு வருடக் கடூழியத் தண்டனை விதித்துத் தீர்ப்பளித்தார்.

### குற்றச்சாட்டு

இவ்வழக்கில் 1963- ஜூன் 25-ம் தேதி கிளிநொச்சியில் கிருஷ்ணன் கணபதிப்பிள்ளை என்பவரை, சின்னத்தம்பி—விரகத்தி என்பவர் கொலை செய்ததாகக் குற்றம் சாட்டப்பட்டிருந்தது.

### வழக்கறிஞர்கள்

எதிரி சார்பில் வழக்கறிஞராக திரு. கே. வி. எஸ். சண்முகநாதன், திரு. பி. ரி. ஜி. பிரிட்டோவின் அனுசரணையுடன் ஆஜரானர். எதிரிக்காக அரசாங்கத்தால் திரு. கோபாலரத்தினம் நியமிக்கப்பட்டிருந்தார். முடிக்குரிய தரப்பில் வழக்கறிஞர் திரு. ஆர். ஐ. ஒபயசேகரா ஆஜரானர்.

குற்றச்சாட்டுப் பத்திரத்தை வாசித்து எதிரியிடம் குற்றவாளியா? சுற்றவாளியா? என்று கேட்டபொழுது எதிரி தான் கைபிழை பாடாகச் செய்ததாகத் தெரிவித்தார்.

எதிரியின் வழக்கறிஞர் திரு. கே. வி. எஸ். சண்முகநாதன் எதிரிசார்பில் பேசும்போது கூறியதாவது:-

எதிரி இதற்கு முன் நீதிமன்றத்தில் குற்றப்படவில்லை. இறந்தவராகிய கணபதிப்பிள்ளையும், எதிரியும் முன்பு மனஸ்தாபமின்றி இருந்தார்கள். எதிரியின் சகோதரர் வள்ளிப்பிள்ளையின் மகள் லட்சுமியை திருமணம் செய்திருந்தார். இறந்தவரின் குடும்பம் வரணியில் இருந்தது. அவர் கலணியில் தனியாகக் குடியிருந்தார். அவர் வேளாள வகுப்பைச் சேர்ந்தவர்

வள்ளிப்பிள்ளை கணவனைப் பிரிந்து தனியாக வாழ்ந்து வந்தார். இறந்தவர் அடிக்கடி வள்ளிப்பிள்ளையை போய்ச் வீட்டில் சந்தித்தார். எதிரியின் சகோதரர் வள்ளிப்பிள்ளையின் முததமகளை திருமணம் செய்திருந்தபடியால் எதிரி இதில் அக்கறை எடுக்க முன் வந்தார். சம்பவம் நடைபெற்ற தினம் எதிரியும், இறந்தவரும் வாக்குவாதப்பட்டனர். வள்ளிப்பிள்ளையிடம் செல்வது நியாயமான செயலல்லவென்றும், வள்ளிப்பிள்ளைக்கு கலியாணமாகாத 16 வயது மகள் இருக்கிறாரென்றும் வள்ளிப்பிள்ளையுடன் தொடர்பு வைத்திருப்பதோடு அவருடைய மகளுடனும் இறந்தவர் தொடர்பு வைத்திருக்கிறார் என்று மக்கள் கதைக்கிறார்கள் என்றும் எதிரி, இறந்தவரிடம் கூறினர்.

"வள்ளிப்பிள்ளையுடன் தொடர்பு வைத்தால் நீ என்ன செய்வாய்" என்று இறந்தவர் கூறியிருக்கிறார். எதிரி, தனது சகோதரன் வள்ளிப்பிள்ளையின் மூத்த மகளைத் திருமணம் செய்திருப்பதால், இறந்தவர் இப்படிச் செய்வது சரியல்லவென்று கூறினர்.

சம்பவம் நடைபெற்றதினம் இரவு 8 மணிக்கு இறந்தவர் அங்கே சென்று விட்டு 9 மணிக்கு வந்தார். அப்பொழுது எதிரி இறந்தவருடன் பேசச் சென்றபோது இறந்தவர் டோர்ச் லைட்டால் எதிரியை தாக்க, எதிரி தடியொன்றினல் இறந்தவரைதாக்கினர். இது சடுதியாக ஏற்பட்ட சண்டை

இறந்தவர் வேளாள வகுப்பைச் சேர்ந்தவர். எதிரியும், வள்ளிப்பிள்ளையும் கோவிய வகுப்பைச்சேர்ந்தவர்கள் இது பற்றி எதிரி இறந்தவரிடம் சொன்னபோது, இறந்தவர் போனல் என்ன செய்வாய் என சவால் விட்டிருக்கிறார், ஒருசமயம் இதுபற்றி எதிரி இறந்தவரை கேட்டபோது உமக்கு விருப்பமானதைச்செய் எனக்கு விருப்பமானதை நான் செய்வேன் என இறந்தவர் கூறியிருக்கிறார்.

நீதி: இறந்தவர் உடலில் 8 காயங்கள் இருப்பதாக டாக்டரின் வாக்கு மூலத்தில் இருக்கிறது.

வழ: இரண்டு காயங்கள் மட்டுமே, ஒரு காயம் இறந்தவர் விழுந்ததினல் ஏற்பட்டது. காலில் உள்ள காயம் இறந்தவர் நிலத்தில் விழுந்ததால் ஏற்பட்டது. எதிரி தனது வாக்குமூலத்தில் இருமுறை அடித்ததாகவும் இறந்தவர் சவால்விட்டதாகவும் கூறியிருக்கிறார், எதிரிக்கு 5 பிள்ளைகள் இருக்கிறார்கள் எதிரி 15 மாதங்கள் விளக்க மறியலில் இருந்திருக்கிறார்.

இதன்பின் நீதியரசர் எதிரிக்கு 4 வருட கடூழிய சிறைத் தண்டனை விதித்து தீர்ப்பளித்தார்.

—

## கிரிக்கெட்-:

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

மக்கன்ஸி வீழ்த்தியது ரசிகர்களுக்கு பெரும் ஏமாற்றத்தையும் ஆச்சரியத்தையும் அளித்திருந்தது. இதன் பின்னர் போர்டேயும் ஓட்டமெதுவும் எடுக்காமல் மக்கன்ஸியின் பந்து வீச்சுக்கு "பலி"யானர் இதைத் தொடர்ந்து விளையாடிய நட்கார்னி 20 ஓட்டங்களும், டுரானி 10 ஓட்டங்களும் எடுத்தனர். ரஞ்சனி ஓட்டமெதுவுமெடுக்கவில்லை.

இதில் ஒரு சிறப்பு என்னவென்றால்; ஹனுமான்சிங் 200 நிமிடங்களில் 94 ஓட்டங்கள் எடுத்திருந்தார். இவர் மொத்தம் 18 "பவுண்டரிகள்" அடித்திருந்தார். மஞ்சரீகர் 40 ஓட்டங்கள் எடுத்திருந்தார். இன்று நடைபெற்ற போட்டி போதிய வெளிச்சமில்லாத காரணத்தால் ஒரு சந்தர்ப்பத்தில் 10 நிமிடநேரம் ஒத்தி வைக்கப்பட்டிருந்தது.

### அடுத்த டெஸ்ட்

ஆஸ்திரேலியாவுக்கும் இந்தியாவுக்குமிடையே நடைபெறும் 2-வது கிரிக்கெட் டெஸ்ட், சனிக்கிழமை 10-ம் திகதி பம்பாயில் ஆரம்பமாகிறது.

### காணவில்லை

யாழ்ப்பாணம் திறந்த வெளியரங்கில் சீனர் சர்க்கஸ் நடைபெற்ற 6-10-64ல் தங்கச் சங்கிலி தொடுக்கப்பெற்ற பெண்கள் கைக்கடிகாரம் கைதவறி விட்டது. கண்டெடுப்பவர்கள் 'ஈழநாடு' காரியாலயத்தில் ஒப்புவிக்கவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும். 1014

இப் பத்திரிகை ஈழநாடு லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேலவீதி 68-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1964- ம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 8-ந் திகதி அச்சிட்டுவெளியிடப்பட்டது'